Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, MARCH 7, 2022

திங்கட்கிழமை மார்ச் 07, 2022 | ஒளி: 07 கதிர்: 248 | பக்கம்:09 | நகரப்பதிப்பு★ | FREE

'தமிழன் குண்டு'கள் 220 மீட்பு

■ செகிதாஷன்

முள்ளிவாய்க்கால் கிழக்கு சனசமூக மண்டபத்துக்கு அருகாமையிலுள்ள காணியை, மார்ச் 2ஆம் திகதியன்று துப்புரவு செய்து கொண்டிருந்த போது புதைக்கப்பட்ட வெடிபொருட்கள் சில அடையாளம் காணப்பட்டுள்ளன.

சம்பவ தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

'கை'க்கு கரம் நீட்டினார் கோட்டா

அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகிய இருவரும் அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டதை அடுத்து, அரசாங்கத்துக்குள் ஒரு சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய தலைமையின் கீழ், இனியொருபோதும் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்ளமாட்டேன் என, விமல் வீரவன்ச உறுதியாக அறிவித்துவிட்டார்.

இந்நிலையில், நாளையதினம் பேச்சுவார்த்தைக்கு வருமாறு, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார் என அறியமுடிகிறது.

தொடர்ச்சி P2

"பிடுங்கிய பற்களை இணைக்க மாட்டோம்"

■ எஸ்.கணேசன்

அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட விமல், கம்மன்பில ஆகிய இருவருமே 'மறிந்த சிந்தனை'யின் பின்னணியில் இருந்து செயற்பட்டவர்கள் எனவும் அவ்விருவரையும் அரசாங்கம் தூக்கியெறிந்து விட்டதெனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திலீஸ அத்தநாயக்க,

தொடர்ச்சி P2

வவுனியா விபத்தில்

தந்தையும் மகனும் பலி

வவுனியா, குருக்கள் புதுக்குளம் பகுதியிலுள்ள, மன்னார் பறயனாலங்குளம் பிரதான வீதியில் நேற்று (06) காலை இடம்பெற்ற விபத்தில் தந்தையும் மகனும் உயிரிழந்தனர்.

மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பஸ், குருக்கள் புதுக்குளம் பகுதியில் சென்றுகொண்டிருந்த போது, உள் வீதியில் இருந்து பிரதான வீதிக்கு வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

பங்காளிகள் வெளியேறினாலும் அரசாங்கத்துக்கு பாதிப்பில்லை

■ க. அகரன்

பங்காளிக் கட்சிகளின் அமைச்சர்கள் வெளியேற்றப்பட்டு அமைச்சு மாற்றங்கள் இடம்பெற்றமை அரசாங்கத்துக்கு பாதிப்பில்லை என, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியாவில் கட்சி உறுப்பினர்களுடன் நேற்று (06) இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐ.நா ஆணையாளரின் அறிக்கை தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், "இது காலத்துக்கு காலம் வரும் அறிக்கையே. ஆனால் இங்கு எவ்வாறான நடவடிக்கைகள் உள்ளது என்பதில்தான் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்." எனத் தெரிவித்தார்.

இதேவேளை,

தொடர்ச்சி P2

ஒரு வருட காலப்பகுதியில்

மஜ்மா நகர் மையவாடி; 3,634 சடலங்கள் அடக்கம்

■ எஸ்.எம்.எம்.முர்ஷிதீன்

கொரோனா தொற்றால் மரணித்த நபர்களை நல்லடக்கம் செய்து வந்த ஒட்டமாவடி - மஜ்மா நகர் மையவாடியில் நல்லடக்கப் பணிகள் நிறைவுக்கு வந்துள்ளதாக ஒட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம். நௌபர் தெரிவித்தார்.

கொரோனா தொற்றால் மரணிக்கும் நபர்களை மார்ச் 2ஆம் திகதி முதல் எந்தவொரு மையவாடிகளிலும் அடக்கம் செய்யலாம் எனும் சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையின் படி,

தொடர்ச்சி P2

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால்

மலையகத்தில் பாதிப்பை சந்தித்தோர் நாங்களே

■ எஸ்.கணேசன்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் அதிகமான பாதிப்பை மலையகத்தில் சந்தித்தவர்கள் மலையக மக்கள் முன்னணியே என்று தெரிவித்த நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன், எங்களுடைய தலைவரும் கட்சியின் விசுவாசிகள் கைது செய்யப்பட்டனர் என்றார்.

தொடர்ச்சி P2

"தந்தை வழியில் செல்வேன்"

■ எஸ். லெஸ்லிதாஸ்

பிரஜா உரிமையையும் வாக்குரிமையையும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு எனது தகப்பன் பெற்றுக்கொடுத்ததைப் போன்று, அவரது மகனான நான், எனது ஆட்சியில் அத்தொழிலாளர்களுக்கு வீட்டு உரிமையையும் காணி உரிமையையும் பெற்றுக் கொடுப்பேன் என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ உறுதியளித்தார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் 26வது மாநாடும் மகளிர் தின நிகழ்வுமாக இருபெரும் விழாக்கள் பதுளை மாநகரில், சனிக்கிழமை (05) நடைபெற்றது.

தொடர்ச்சி P2

"அரிசி இல்லை என்றால் மணலைத் தின்போம்"

ஜனாதிபதியை விமர்சிக்க வேண்டாம் எனப் போராட்டம்

ஜனாதிபதியை விமர்சிக்க வேண்டாம் என்றும், இலங்கையில் வாழ்வதற்குரிய சுமைகளை தாங்கள் சுமக்கப் போவதாகவும் கூறி, தனது இல்லத்துக்கு முன்னால் ஒரு குழுவினரால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர, நேற்று (06) தெரிவித்தார்.

டீசல் இல்லாவிட்டால் மாட்டு வண்டிகளில் பயணம் செய்வோம்;

தொடர்ச்சி P2

பின்நோக்கி வீசப்பட்டனர் வீரவன்சவும் கம்மன்பிலவும்

அமைச்சுப் பதவிகளில் இருந்து அண்மையில் நீக்கப்பட்ட விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கு பாராளுமன்றத்தில் பின்வரிசை ஆசனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இருவரும் அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டமை மற்றும் பல அமைச்சரவை அமைச்சுகள் மாற்றியமைக்கப்பட்ட காரணத்தால்,

தொடர்ச்சி P2

அபராதச் சீட்டுகள்

விதிகளை மீறுவோரின் வீடு தேடி வரும்

போக்குவரத்து விதிகளை மீறுபவர்களை போக்குவரத்து கண்காணிப்பு கட்டமைப்பு மூலம் அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ள பொதுப் பாதுகாப்பு அமைச்சு, விதிகளை மீறுவோருக்கான அபராதச் சீட்டுகளை அவர்களது வீட்டுக்கு அனுப்பவும் பொலிஸ் திணைக்களம் விரைவில் ஓர் அமைப்பை அறிமுகப்படுத்தும் என்று தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

பயங்கரவாத தடைச்சட்டம்

முழுமையாக நீக்கப்பட வேண்டும்

"பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என அனைத்து இன மக்களும் வலியுறுத்தி வருகின்றனர் என்றும் ஆதரவு தெரிவித்து கையொப்பம் இடுகின்றனர் என்றும் தெரிவித்த தமிழித் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன், எனவே,

தொடர்ச்சி P2

கோதுமை மா கேட்டானும் சட்டம் பாயும்

"மலையக மக்களுக்கு மானிய விலையில் கோதுமை மா வழங்கப்படும் என அரசாங்கம் கூறியது. ஆனால், அது உரிய வகையில் நடக்கவில்லை. அதற்கு எதிராக மக்கள் போராடினால், அவர்களுக்கு எதிராகவும் பயங்கரவாத தடைச் சட்டம் பயன்படுத்தப்படலாம்; கைது செய்யப்படலாம்" என்று தமிழித் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

நாட்டை விட்டுச்செல்ல அரசியல்வாதிகள் முயற்சி

ஆளும் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் சிலர், பல்வேறு காரணங்களுக்காக நாட்டை விட்டுச் செல்வதற்கு தயாராகி வருகின்றனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதில், சில பல காரணங்களுக்காக அரசாங்கத்தின் செயற்பாடுகளால் அதிருப்தியடைந்த சிலரும் இருக்கின்றனர் என அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க, மூன்று மாத விடுமுறையில் ஜப்பானுக்குச் சென்றுள்ளார். அவருக்கான விடுமுறையை, பாராளுமன்றம் கடந்தவாரம் அங்கிகரித்து இருந்தது.

தொடர்ச்சி P2

மாணவர்களை பிரித்துப் பிரித்து குழுக்களாக அழைக்க அறிவுறுத்தல்

2022ஆம் ஆண்டுக்கான அடுத்த பாடசாலை தவணை கல்வி நடவடிக்கைகள், இன்று (07) ஆரம்பமாகவுள்ளன.

2021 கல்வி பொதுதராதர உயர்தர பரீட்சைகள் நிறைவடைந்ததையடுத்து, பாடசாலை கல்வி நடவடிக்கைகளை இன்று ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய பாடசாலை ஆரம்பமாகும் நிலையில், பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் கல்வியமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் கூடிய புதிய சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

'கைக்கு' கரம் நீட்டினார் கோட்டா

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 உறுப்பினர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று நாளை (08) பிற்பகல் 4.00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சமர்ப்பித்துள்ள பிரேரணை தொடர்பில் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சமர்ப்பித்துள்ள பிரேரணை தொடர்பில் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 15 அம்ச தீர்மானம் ஒன்றை அண்மையில் சமர்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான விசேட கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் (05) இரவு பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரின் அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் கலந்துரையாடலுக்கு வருமாறு ஜனாதிபதி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு விடுத்த அழைப்பு குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையில் ஒரு மணித்தியாலத்துக்கும் அதிகமாக கலந்துரையாடல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

'பிடுங்கிய பற்களை இணைக்க மாட்டோம்'

பிடுங்கி எறியப்பட்ட பற்களை மீண்டும் இணைந்துக்கொள்ள மாட்டோம் என்றும் தெரிவித்தார்.

"நாட்டை மீட்டெடுத்து, மக்களைப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டம் எம்மிடம் உள்ளது. எனவே, மக்கள் அணை வழங்கினால் ஆட்சியை பொறுப்பேற்று, சிறந்த நிர்வாகத்தை வழங்குவோம்" என்றார்.

நுவரெலியா - கொத்மலை கடதொரவில் நேற்று (06) இடம்பெற்ற அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் சுருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அதேவேளை, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்களின் கடந்த கால செயற்பாடுகளை நாங்கள் நன்கறிவோம். அவர்கள் மக்களை தவறாக வழிநடத்தினர் என்று குறிப்பிட்டார்.

அப்படியானவர்களை இணைத்துக்கொள்வது பற்றி சிந்திக்க வேண்டியதும். அரசாங்கத்தில் இருந்து வெளியேறியவர்கள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் எல்லோரையும் இணைத்துக்கொள்ளும் அளவுக்கு எமது கட்சி பலவீனம் அடையவில்லை என்றார்.

தந்தையும் மகனும் பலி

விபத்தில், மோட்டார் சைக்கிளைத் செலுத்திச்சென்ற தந்தை சம்பவ இடத்திலேயே உடல்நசுங்கி பலியாகியதுடன், அவரது மகன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவத்தில் குருக்கள் புதுக்குளம் பகுதியை சேர்ந்த பு.சிறிதரன் (வயது 46) மற்றும் அவரது 14 வயது மகனான டி.னோகாந் ஆகியோரே பலியாகினர்.

விபத்தினையடைந்து ஆத்திரமடைந்த கிராம மக்கள் பஸ்ஸை தாக்கியமையால் குறித்த பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வருகைதந்த பூவரசங்குளம் பொலிஸார் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர முயற்சித்தனர்.

எனினும் அது பலனளிக்காத நிலையில் விசேட அதிரடிப்படையினர் சம்பவ இடத்துக்குஅழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

விபத்து தொடர்பில் பஸ் சாரதி, பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பின்னோக்கி வீசப்பட்டனர் வீரவன்சவும் கம்மன்பிலவும்

பாராளுமன்ற ஆசனப் பங்கீட்டிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஆளும் கட்சியின் பின்வரிசையில் 73.ஆவது ஆசனத்தை விமல் வீரவன்சவும், ஆளும் கட்சியின் 78.ஆவது ஆசனத்தை உதய கம்மன்பிலவும் பெறவுள்ளனர் என்று குறிப்பிட்டார்.

முன்னாள் கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க பாராளுமன்றத்தில் மிகவும் சிரேஷ்ட உறுப்பினர் என்பதனால் அவருக்கு முன்வரிசையில் இரண்டாவது ஆசனம் (முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆசனத்துக்கு அருகாமையில்) வழங்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுக்கு முன்வரிசையின் இரண்டாவது ஆசனம் முன்னாள் வழங்கப்பட்டிருந்த நிலையில், அவருக்கு ஆளுங்கட்சி வரிசையில் வேறோர் ஆசனம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய போக்குவரத்து அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட திலும் அமுனுகம ஆளுங்கட்சியின் இரண்டாம் வரிசையில் (அமைச்சர் சரத் வீரசேகரவின் ஆசனத்துக்கு அண்மையிலுள்ள ஆசனம்) 30.ஆவது ஆசனத்தை வகிக்கவுள்ளார்.

நாட்டை விட்டுச்செல்ல அரசியல்வாதிகள் முயற்சி

இந்நிலையில், மற்றுமோர் இராஜாங்க அமைச்சரான நிமல் லன்சா, வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார். அரசாங்கத்தின் செயற்பாடுகளினால் ஏற்பட்டமன அழுத்தம் காரணமாக, இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா, சில நாட்களுக்கு வெளிநாட்டுக்கு சென்றுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களாக பதவி வகித்த பலரும் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு தயாராகி வருகின்றனர் என அறியமுடிகிறது.

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போதும் தங்களுக்கு எவ்விதமான பொறுப்புவாய்ந்த அமைச்சு, பிரதியமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்கூட கிடைக்காமையால் சிலர் அதிருப்தியில் உள்ளனர் என்றும் அவர்களும் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு தயாராகி வருகின்றனர் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

முழுமையாக நீக்கப்பட வேண்டும்

இச்சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என்றார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், " பயங்கரவாத தடைச்சட்டமானது 40 ஆண்டுகாலமாக தமிழ் மக்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டுவந்தது. இடையிடையே சிங்கள இளைஞர்கள் தண்டிக்கப்பட்டனர். தற்போது முஸ்லிம் மக்களுக்கு எதிராக மிக மோசமாக இச்சட்டம் பயன்படுத்தப்படுகின்றது.

நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், அதற்கு எதிராக போராடுபவர்களை ஒடுக்குவதற்கும் இந்தச்சட்டத்தை பயன்படுத்துவதற்கு அரசாங்கம் தயாராகிவருகிறது.

பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதே சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடாகும். இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் இதனையே வலியுறுத்துகின்றனர்" என்றார்.

'தமிழன் குண்டுகள்' 220 மீட்பு

முல்லைத்தீவு பொலிஸாரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நீதிமன்ற அனுமதிக்கப் பின்னர், அடையாளப்படுத்தப்பட்டிருந்த அந்தப்பகுதி, வெடிபொருள் செயலழிக்கும் சிறப்பு அதிரடிப்படையினரால், கடந்த 4ஆம் திகதி தோண்டப்பட்டுள்ளது.

இதன்போது, விடுதலைப்புலிகளின் தயாரிப்பான "தமிழன் கைக்குண்டுகள்" 220 மீட்கப்பட்டுள்ளன. இவற்றை அழிப்பதற்கு நீதின்ற உத்தரவு வழங்கியுள்ளது.

'தந்தை வழியில் செல்வேன்'

அதில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தொழிலாளர்கள் வாழ்ந்துவரும் நீண்ட லயன் குடியிருப்பு முறைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். தமக்கான தனிவீடுகள் அவர்கள் அனைவருக்கும் இருக்க வேண்டியது அவசியமாகும்" எனத் தெரிவித்த அவர், "அவ்வீடுகளுக்கான பூரண உரிமை தொழிலாளர்களுக்கு இருக்கவும் வேண்டும். எமது ஆட்சியிலேயே அவற்றை செய்வோம்" என்றார்.

'அரிசி இல்லை என்றால்...

எப்படியாவது குழந்தைகளுக்கு பால்மா இல்லாமல் உணவளிப்போம், சிமெந்து இல்லை என்றால் களிமண்ணில் வீடு கட்டுவோம், அரிசி இல்லை என்றால் மணலைத் தின்போம் என்று அந்தக் குழுவினர் கூறியதாக தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று (06) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த ஹிருணிக்கா தெரிவித்ததாவது, ஜனாதிபதியின் இல்லத்துக்கு முன்பாக ஐக்கிய மக்கள் சக்தியினரால் சனிக்கிழமை (05) ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதை அடுத்து சுமார் 40 முதல் 50 பேர் வரை தனது இல்லத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக தெரிவித்தார்.

ஜனாதிபதியின் தீர்வுக்காக பொறுமையாக காத்திருப்போம் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறியதாகத் தெரிவித்த ஹிருணிக்கா, இவர்கள்தான் இலங்கையின் உண்மையான அடிமைகள் என்றார்.

தாங்கள் உணர்ந்த அதே வலியை பொலிஸாரும் உணர்ந்ததால், ஜனாதிபதியின் இல்லத்துக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, எந்தவொரு பொலிஸ் உத்தியோகத்தரும் தங்களை கைது செய்யவோ அல்லது பிரதேசத்தை ஆளுந்தரப்பு பயன்படுத்திவருகின்றது.

மஜ்மா நகர் மையவாடி 3,634 சடலங்கள் அடக்கம்

ஒட்டமாவடி மஜ்மா நகரில் மேற்கொள்ளப்பட்டு வந்த நல்லடக்கப் பணிகள் நிறைவுக்கு வந்துள்ளன.

ஒட்டமாவடி - மஜ்மா நகர் மையவாடியில் 2021 மார்ச் 5 முதல் 2022 மார்ச் 5 வரையான ஒரு வருடத்தில் 3,634 சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. அதில், அனைத்து இனங்களைச் சேர்ந்தவர்களின் சடலங்களும் அடங்குகின்றன.

"ஜனாஸா நல்லடக்கப் பணியை எமது பிரதேச சபை மேற்கொள்வதற்கு இதுவரை காலமும் சகல விதங்களிலும் ஒத்துழைப்புக்களை வழங்கிய அரசாங்கத்துக்கு நன்றிகளை தெரிவிக்கிறேன்" என்று தவிசாளர் தெரிவித்தார்.

பங்காளிகள் வெளியேறினாலும் அரசாங்கத்துக்கு பாதிப்பில்லை

அண்மையில் வவுனியாவில் உங்கள் கட்சி ரீதியாக மேற்கொள்ளப்பட்ட சம்பவமானது பலத்த விமர்சனத்தினை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் கட்சி ரீதியாக எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளீர்கள் என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியபோது,

"அவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம். அதில் சாதக பாதிக நிலைமைகள் உள்ளன. சரியான நிலைமைகளை அறிந்து அவ்வாறான நிலைமைகள் தொடராமல் இருப்பதற்கு நாங்கள் முடிவு எடுத்துள்ளோம்" என்றார்.

மேலும் அங்கு அவர்

> **எதிர்வரும் 18 ஆம் 19 ஆம் திகதிகளில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வருகிறார்**

தெரிவிக்கையில், "நீண்ட கால இழுபறிக்கு மத்தியில் இலங்கையில் இருந்து 50 பேரும் இந்தியாவில் இருந்து 50 பேரும் கச்சதீவுக்கு போகலாம் என தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் ஜனாதிபதியுடன் நான் கலந்துரையாடி இரு பக்கத்தில் இருந்தும் நூறு, நூறு பேராக கச்சதீவு அந்தோனியார் திருவிழாவிற்கு செல்ல ஏற்பாடு செய்திருக்கின்றேன். கச்சதீவுக்கு நானும் செல்வதாக உள்ளேன். ஏனெனில் இருதரப்பு கடற்றொழிலாளர்களுக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வையும் நட்புறவையும் ஏற்படுத்துவற்காக நானும் செல்வதாக உள்ளேன்.

இதேவேளை, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பேச்சுக்கள் தொடர்கின்றன. எதிர்வரும் 18 ஆம் 19 ஆம் திகதிகளில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வருகிறார்.

அப்போது அமைச்சருடனான சந்திப்பு நடைபெறும். அதற்கு முன்னராக அதிகாரிகள் மட்டத்திலான பேச்சும் இடம்பெறவுள்ளது" என்றார்.

விதிகளை மீறுவோரின் வீடு தேடி வரும்

மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றுடன் பொலிஸாரும் இணைந்து இந்த அமைப்பை ஏற்படுத்துவதற்கு செயற்பட்டு வருவதாக அமைச்சு அறிவித்துள்ளது.

கொழும்பு நகரின் 33 வீதிகளை உள்ளடக்கிய சீசீரிவி பிரிவை பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அண்மையில் பார்வையிட்டார்.

இந்த பிரிவு 2010 ஆம் ஆண்டில் போக்குவரத்து இயக்கங்களை கண்காணிக்க உருவாக்கப்பட்டது.

தற்போதுள்ள தொழில்நுட்பத்தின் கீழ், போக்குவரத்து விதிகளை மீறுபவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் மெதுவாகவே நடைபெறுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கோதுமை மா கேட்டாலும் சட்டம் பாயும்

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "எமது விடுதலைப் போராட்டத்துக்கு மலையக மக்களும் பெரும் பங்களிப்பு செய்துள்ளனர். இதனால் பயங்கரவாத தடைச்சட்டத்தால் அவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

தற்போது பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பதிலாக, தமது அரசியல் எதிராளிகளை ஒடுக்குவதற்காகவே இச்சட்டத்தை ஆளுந்தரப்பு பயன்படுத்திவருகின்றது.

இதனால்தான் அனைத்து இன மக்களையும் இந்த பயணத்தில் இணைத்துள்ளோம்.

தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட வேண்டிய காலம் வந்துள்ளது. அந்தவகையில் பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிராக தற்போது ஒரணியில் திரண்டுள்ளோம். மக்களும் ஒன்றுபட்டுள்ளனர். எனவே, சிறந்த எதிர்காலத்துக்கான ஆரம்பப் புள்ளியாக்கூட இது அமையலாம்" என்றார்.

மாணவர்களை பிரித்து, பிரித்து குழுக்களாக அழைக்க அறிவுறுத்து

20 மாணவர்களைக் கொண்ட வகுப்புகளில் அனைத்து மாணவர்களும் அனைத்து நாட்களிலும் பாடசாலைக்கு அழைக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

20 தொடக்கம் 40 வரையான மாணவர்களைக் கொண்ட வகுப்புகளில், மாணவர்கள் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒருவாரம் விட்டு ஒருவாரம் என்ற அடிப்படையில் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென புதிய சுற்றுநிருபத்தில்

> **பூரணப்படுத்தப்பட வேண்டுமென கல்வியமைச்சின் செயலாளரினால் மாகாண கல்வி செயலாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது**

தெரிவிக்கப்பட்டுள்ளது.

40-க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட வகுப்புகளில் மாணவர்களை சமமான எண்ணிக்கையில் 03 குழுக்களாக பிரித்து கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் பாடசாலைக்கு அழைக்கப்படாத மாணவர் குழுக்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகள், மாற்று வழிமுறைகள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு, அவர்களுக்கான பாடத்திட்டமும் பூரணப்படுத்தப்பட வேண்டுமென கல்வியமைச்சின் செயலாளரினால் மாகாண கல்வி செயலாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மலையகத்தில் பாதிப்பை சந்தித்தோர் நாங்களே

எனவே இந்த சட்டத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதில் மலையக மக்கள் முன்னணி எந்த போராட்டத்தையும் வடக்கு, கிழக்கு கட்சிகளுடன் இணைந்து செயற்பட தயாராக இருக்கிறது என, தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக நுவரெலியாவில் நேற்று (06) இடம்பெற்ற கையெழுத்து வேட்டையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது தமிழர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு சட்டமாகவே இந்த நாட்டில் பலரும் கருதுகின்றார்கள். ஆனால் அந்த சட்டமானது தமிழர்களுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டில்

> **வடக்கு, கிழக்கிலே யுத்தம் நடந்தாலும் மலையக பகுதியில் இருக்கின்ற இளைஞர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர்**

இருக்கின்ற அனைவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கின்ற ஒரு சட்டமாகும். இந்த சட்டத்தின் மூலமான எந்த ஒரு நடபடியும் கைது செய்கின்ற அதிகாரம் பொலிஸாரிடம் இருக்கின்றது. எனவே அனைத்து மக்களும் இணைந்து இந்த சட்டத்திற்கு எதிராக போராட வேண்டும்.

வடக்கு கிழக்கிலே யுத்தம் நடந்தாலும் மலையக பகுதியில் இருக்கின்ற இளைஞர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். எனவே இந்த சட்டம் இல்லாமல் செய்ய வேண்டும் என்பதில் நாங்கள் மலையகத்தில் மிகவும் அக்கறையாக இருக்கின்றோம்" என்றார்.

"ஆட்சிக்கு ஆயுள் குறைவு"

உண்மையான தகவல்களைத் தெரிந்துகொள்வதே, நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாக இருப்பதாகத் தெரிவிக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன, சேறுபூசும் அரசியலை நாட்டு மக்கள் எதிர்பார்க்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கும்போது கூறியதாவது:

நாட்டின் தற்போதைய நிலைமைகளின் பொருட்டு, பெருமளவான இளைஞர், யுவதிகள் சமூகவலைத்தளங்கள் ஊடாக, அரசாங்கத்தை விமர்சித்து வருகிறார்கள். ஐக்கிய தேசிய கட்சியும் சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்தி, எங்களது நிலைப்பாட்டையும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் தவறான செயற்பாடுகளையும் மக்களிடம் கூற வேண்டும்.

நாட்டில் உயிர் வாழ்வதே சிரமமான ஒன்றாக மாறியுள்ளது. அரசாங்கத்துக்கென கொள்கைகள் எதுவும் கிடையாது. பொருளாதாரக் கொள்கைகள் இல்லை. உண்மையில் பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்கான இயலுமையும் அரசாங்கத்துக்கு இல்லை. இதனால் நாட்டு மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள்.

பெட்ரோல், டீசலைப் பெற்றுக்கொள்வதற்காக அதிகளவானோர் வரிசைகளில் நிற்கின்றனர். நாட்டில் தற்போது காஸ் இல்லை. மின்சாரம் இல்லை. சிங்கள - தமிழ் புதுவருடத்துக்கு முன்னதாக அரிசியின் விலையை குறைக்க வேண்டும். இந்த அரசாங்கம் ஆட்சி குறைந்தது இன்னுமொரு வருடத்துக்கு நீடிக்குமா என்பதே கேள்விகுறியாக உள்ளது என்றார்.

மக்களை நடுக்காட்டில் தவிக்கவிட்டு

ஆட்சியாளர் வேடிக்கை பார்க்கின்றனர்

■ பாறுக் ஷிஹான், அஸ்ஹர் இப்றாஹிம்

நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பி, இளங்களுக்கிடையில் பரஸ்பர ஒற்றுமையை ஏற்படுத்தி, கள்வர்களின் கோட்டையாகி இருக்கும் எமது தாய் நாட்டை மீட்டு, வெளிநாடுகளிடம் பிச்சை கேட்கும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து, எமது தாய் நாட்டின் எதிர்கால சந்ததியினர் நிம்மதி மூச்சுவிடக்கூடியவாறு மாற்றியமைக்க, அனைவரும் அணி திரள வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக அறைகூவல் விடுத்துள்ளார்.

சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில், வெள்ளிக்கிழமை (04) ஒழுங்கு செய்யப்பட்டிருந்த, 'சீரழித்த தாயகத்தைக் கட்டியெழுப்புகின்ற தீர்வு' என்ற நிகழ்வில் கலந்து கொண்டு, பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் தலைவருமான அநுரகுமார திஸாநாயக உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தேசிய மக்கள் சக்தியின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ. ஆதம்பாவா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அநுரகுமார திஸாநாயக மேலும் தெரிவித்திருந்ததாவது:

எமது நாடு, அதிபாதாளத்துக்குச் சென்று விட்டது. இதை இப்படியே விட்டு வைப்போமானால், எமது எல்லா வளங்களையும் வெளிநாடுகளுக்கு விற்று அமைச்சர்களும் அரசாங்கத்தில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களில் தங்கியிருக்கும் வர்த்தக பிரமுகர்களும் சுகபோக வாழ்க்கையை அனுபவிக்க, நாட்டிலுள்ள ஏனைய மக்கள் பாலமாவுக்காகவும் எரிவாயுக்காகவும் எரிபொருட்களுக்காகவும் நீண்ட வரிசையில் கால்கடுக்க நிற்கும் மிக மோசமான நிலை நிரந்தரமாகிவிடும்.

தாம் ஆட்சிபீடம் ஏற வேண்டும் என்பதற்காக, ஜனாதிபதி தேர்தலின் போதும் பொதுத் தேர்தலின் போதும், முஸ்லிம்களுக்கெதிராக இனவாதத்தைத் தூண்டி, அதில் சிங்கள மக்களை கிளர்ச்சியடையச் செய்து, அவர்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஆட்சிபீடமேறிய பின்னர், இன்று நாட்டில் நடப்பதென்ன?

இவ்வளவு காலமும் நாம் பயணித்த பாதையை விட்டு, மாற்றுப் பாதையை காண்பதற்காகவே நாடு முழுவதும் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. நீண்டகாலமாக எங்களை ஆட்சி செய்த இரு கட்சிகளும், மக்களை நடுக்காட்டில் தவிக்க விட்டு, வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டில், சாதாரண குடிமக்களால் வாழ்க்கை நடத்த முடியாத நிலை தோன்றியுள்ளது. நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றது. வெளி நாடுகளிடம் பிச்சை எடுப்பதுபோல் கையேந்த வேண்டிய நிலைமைக்கு நாட்டை தள்ளியுள்ளார் என்றார்.

ஆளுங்கட்சியில் இருந்துகொண்டு

எதிர்க்கட்சி அரசியலை செய்ததால் தூக்கினோம்

மஹிந்தவின் பெயரைப் பயன்படுத்தாது எவராலும் அரசியல் செய்யவோ, கூட்டம் கூட்டவோ முடியாதெனத் தெரிவிக்கும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, "மஹிந்த சூறாவளியின்றி முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பிலவுக்கும் அரசியல் செய்ய முடியாது" எனவும் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நாரம்மல பிரதேச சபையின் புதிய கட்டடத்தை நேற்று முன்தினம் (05) திறந்து வைத்து உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இருப்பதாலேயே எங்களை எங்கு சென்றாலும் மதிக்கிறார்கள். தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்க வேண்டும் என மஹிந்த ராஜபக்ஷ கூறிய வார்த்தைக்காகவே ஜனாதிபதிக்கு 69 இலட்ச மக்கள் வாக்களித்தனர்.

எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு செய்ததையே சிலர் ஆளுங்கட்சிக்குள் இருந்துகொண்டு செய்கிறார்கள்.

தெரிந்தோ, தெரியாமலோ எவராவது ஆட்சியைக் கவிழ்க்க முயற்சித்தால் பேரிழப்பு ஏற்படும். இவ்வாறான நிலையிலேயே விருப்பம் இல்லாத நிலையிலும் அமைச்சர்கள் இருவரை நீக்குவதற்கு ஜனாதிபதி தீர்மானம் எடுத்தார்.

நாட்டில் எரிபொருள் பிரச்சினை இல்லையென நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ என்னிடம் கூறினார். இது தொடர்பில் நாட்டு மக்கள் பீதியடைய வேண்டாம் எனவும் நான் பொறுப்புடன் கூறுகிறேன். நாட்டு மக்களுக்கு நம்பிக்கையை வழங்காது, நம்பிக்கையை சீர்குலைத்தவர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்றார்.

என் பிள்ளைகளுக்குப் பாதிப்பு என்றால்

ஜெனீவா செல்லத் துயங்கேன்

மாலபேயில் உள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்ரவின் வீட்டுக்கு முன்பாக, நேற்று முன்தினம் (05) இரவில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கக்கோரி, ஹிருணிகா தலைமையிலான ஐக்கிய பெண்கள் சக்தியினர் மிரிஹானவில் உள்ள ஜனாதிபதியின் இல்லத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இப்போராட்டம் நடைபெற்ற சில மணி நேரங்களுக்குப் பின்னர், ஹிருணிகாவின் வீட்டுக்கு முன்பாக இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இல்லத்துக்கு முன்பாகத் தான் போராட்டத்தில் ஈடுபட்டதற்கு பழிவாங்கும் நோக்கில், தனது வீட்டுக்கு முன்பாக போராட்டம் நடைபெற்றதாக ஹிருணிகா தெரிவித்துள்ளதோடு, வீட்டில் உள்ள தனது பிள்ளைகள் மூவருக்கும் சிறிய பாதிப்புகள் ஏற்பட்டாலும் இந்த விவகாரத்தை ஜெனீவா போன்ற சர்வதேச சமூகத்துக்கு

எடுத்துச் செல்லத் தான் தயங்கப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் மிரிஹான இல்லத்துக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்ட போராட்டம் காரணமாக, குற்றவியல் சட்டத்தின் கீழ் தன்னைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியிடம் கேள்வி கேட்பதற்காகவே நாம் அங்கு சென்றிருந்தோம். தேவையற்ற செலவுகளாலேயே நாட்டில் டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆண்களை விட முதுகெலும்பு வலுவாக உள்ள பல பெண்கள், தங்களுடன் போராட்டத்தில் இணைந்துகொண்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த மாநாடு

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 25ஆவது வருடாந்த மாநாடு, இம்மாதம் 12ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ளது.

கொழும்பு அல் - ஹிதாயா மகா வித்தியாலய பஹுரூதீன் கேட்போர் கூடத்தில், போரத்தின் தலைவர் எஸ்.எம். அமீன் தலைமையில் இரண்டு அமர்வுகளாக நடைபெற உள்ள இம்மாநாட்டில், முதல் அமர்வில் பிரதம அதிதியாக ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும கலந்துகொள்கிறார்.

மற்றோர் அமர்வுக்கு, இந்திய லோக்சபா பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி கௌரவ அதிதியாகக் கலந்து சிறப்பிப்பதோடு, கலாநிதி எம்.சி. ரஸ்மின், 'முஸ்லிம்களும் ஊடக எதிர்காலமும்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகிறார்.

இரண்டாவது அமர்வில், வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறும். புதிய உத்தியோகத்தர்கள் தெரிவும் மற்றும் யாப்புத் திருத்தம் பற்றிய செயற்குழு பிரேரணையும் இதன்போது ஆராயப்படும்.

சுகாதார வழிமுறைகளை முழுமையாகப் பேணி, இம்மாநாடு நடத்தப்பட இருப்பதால் மட்டுப்படுத்தப்பட்ட அங்கத்தவர்கள் பங்கேற்றலுடன் இம்மாநாடு நடைபெறவிருப்பதாக போரத்தின் செயலாளர் எஸ்.ஏ.எம். ஸாதிக் சிஹான் தெரிவித்தார். அனைத்து அங்கத்தவர்களுக்கும் மாநாடு தொடர்பான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கடிதம் கிடைக்காதவர்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் செயலாளரின் 077 311 25 61 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

தாயின் தலையில் சுத்தியலால் தாக்கிய மகள்

■ சுதீத குமார டி சில்வா

மகளொருவர் தனது தாயைத் தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் பேருவளையில் பதிவாகியுள்ளது.

17 வயதான தனது மகள், வயது முதிர்ந்தவருடன் காதல் வயப்பட்டிருந்தார். இதைத் தாய் கண்டித்து எச்சரித்துள்ளார். தாயின் எச்சரிக்கையால் கோபமடைந்த 17 வயதான மகள், தாயைத் தாக்கியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் தாய்க்கும் மகளுக்கும் அடிக்கடி வாய்த்தர்க்கம் ஏற்படுமெனவும், இந்நிலையில் ஆத்திரமடைந்த மகள், இரும்பு சுத்தியலால் தாயின் தலையில் பல தடவைகள் தாக்குதல் நடத்தியதாக, அந்தத் தாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வைத்தியசாலையில் தாய் அனுமதிக்கப்பட்டு உள்ளதாகவும் அவரின் நிலைமை மோசமானதாக இல்லை எனவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமல், உதயவுக்கு புது அழைப்பு

அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோருக்கு புதிய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அவ்விரு கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் இணைந்துகொள்ளுமாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அழைப்பு விடுத்துள்ளதாக அறியமுடிகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், அண்மையில் கூடிய கட்சி உறுப்பினர்களுடனான கூட்டத்திலேயே இதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் இன்னும் சில கட்சிகளை இணைந்துகொண்டு முழுமையான கூட்டமைப்பை உருவாக்குவதற்கே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி திட்டம் வகுத்துள்ளது.

அதனடிப்படையில் விமல் வீரவங்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பில தலைமையிலான பிவித்துரு ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் உறுப்பினர்களை இணைத்துக்கொள்வதற்குக் கலந்துரையாடப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

பதவியை இழந்தாலும் பாதுகாப்பு தொடர்கிறது

அமைச்சுப் பதவிகளில் இருந்து விலக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பிலவுக்கு அமைச்சர்களுக்கான பாதுகாப்பே தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

விமலுக்கும் கம்மன்பிலவுக்கும் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான எந்தவிதமான ஆலோசனைகளும் பொலிஸாருக்குக் கிடைக்கவில்லை என, பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

அமைச்சர் ஒருவருக்கு உத்தியோகபூர்வமாக அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 7 பேர் பாதுகாப்பு கடமைகளுக்காக வழங்கப்படுவார்கள்.

தொழிற்றுறை அமைச்சர் விமல் வீரவன்ச, வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோர் அந்தந்த அமைச்சுப் பதவிகளில் இருந்து, நீக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொழில் திணைக்களத்துக்கு முன்னால் இன்று போராட்டம்

இலங்கை செங்கொடி சங்கமும் இலங்கை தொழிற்சங்க சம்மேளனமும் இணைந்து, கொழும்பில் உள்ள தொழில் திணைக்களத்துக்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளது.

கூட்டொப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு முதலாளிமார் சம்மேளனம் மறுப்புத் தெரிவித்தமையால் தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் அநீதிகளை நிறுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

கொழும்பில் இன்று (07) முன்னெடுக்கப்படும் இப்போராட்டத்துக்கு தொழில் அமைச்சு உரிய தீர்வை வழங்காவிடின் தொடர்ந்து இப்போராட்டத்தை இரவு பகலாக முன்னெடுக்க உள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்நோனி தந்துவமந்திரவை அபந்து செய்தல்

ஹிதகலை, பாலின்கமுவ இல. 365 எனும் முகவரியில் வசிக்கும் தேவ அடையாள அட்டை இல. 535116934V உடைய நுகலியந்த கேறுகலனாகே தயா மலனிகே ஆகிய நான் ஹிதகலை, பாலின்கமுவ இல. 365/B, வசிக்கும் தேவ அடையாள அட்டை இல. 766597726வி உடைய ஹபுகிரிந்த முதியன்சேனாகே ரோயன்த் ரோஹுனா ஹபுகிரந்த அவரதுகை வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிச எம். ஏ ஸனில் சித்திரசேன மஹநுவரவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 6906 மற்றும் 15.03.2021 ஆம் திகதியுடைய அந்நோனி தந்துவத்தினை இந்தாம் இரத்து செய்கிறேன் எனவும் அவ் அந்நோனி தந்துவங்களுக்கு இந்தக்கு பின்னரான எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இவர்களை ஜனநாயக சோசலிச குடியரசின் மக்களுக்கு இந்தாம் அறியப்படுத்துகின்றேன்.

25 ஜனவரி 2022
கண்டி

நுகலியந்த கேறுகலனாகே
தயா மலனிகே

அரசியல் இலாபப் பேச்சு:

பாதிப்பை ஏற்படுத்தாது

மஸ்தான் எம்.பி. கூறுகின்றார்

■ க.அகரன்

அரசியல் இலாபத்துக்காக வெளியில் பேசுவதால் ஏற்படும் பிரச்சினை, அரசியல் நீதியில் எமக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

"எரிபொருள் விலையேற்றம்

என்பது எல்லா நாடுகளிலும் ஏற்பட்டுள்ளது. கச்சா எண்ணெய்யின் விலையேற்றம் காரணமாக இது ஏற்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் அதனைத் தவிர்த்துக்கொள்ள முடியாது. எரிபொருள் தட்டுப்பாடு விரைவாகத் தீர்க்கப்படும். கப்பல்கள் வந்திருக்கின்றன. எரிபொருள் இறக்கப்படுகின்றது. வழமை போன்று எரிபொருள் விநியோகம் விரைவில் நடக்கும்.

ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் ஒரு குடும்பமாக இருந்து எடுத்த முயற்சிகள்தான் எமக்குப் பாரிய வெற்றிகளைத் தந்தன. குடும்பத்துக்குள் ஏற்படும் பிரச்சினைகளை அங்கேயே பேசித் தீர்க்க வேண்டுமே தவிர, அதைப் பொதுவெளியில் சொல்லும்போது பாரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

குழுக் கூட்டம், கட்சித் தலைவர் கூட்டம் என இருந்தும் அதில் பேசாமல் அரசியல் இலாபத்துக்காக வெளியில் பேசுவதால் ஏற்படும் பிரச்சினையால் ஏற்படும் பாதிப்புகள் அரசியல் நீதியில் எமக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது" என்றார்.

வெடிபொருட்களுடன் தம்பதி கைது

■ வ.கீதாநந்தன்

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய, புதுக்குடியிருப்பு, இரணைப்பாலைப் பகுதியில் வீட்டில் முன்னெடுக்கப்பட்ட சோதனையில், அவ்வீட்டிலிருந்து வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், கணவனும் மனைவியும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போரின்போது கைவிடப்பட்ட வெடிகுண்டுகளை இவ்விருவரும் உடைத்து, வீட்டில் வைத்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

சிறுமி துஷ்பிரயோகம்;

குடும்பஸ்தர் சிக்கினார்

■ வ.கீதாநந்தன்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் பதின்ம வயது சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் குறித்த சிறுமியின் தாயாரின் இரண்டாவது கணவன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பதின்ம வயது சிறுமி வெளிமாவட்டத்தில் விடுதியில் தங்கி கல்வி கற்று வந்த நிலையில் விடுமுறையில் வீடு வந்த நிலையில், மனைவியின் இரண்டாவது கணவனால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய, 36 வயதுடைய குடும்பஸ்தர் கைதுசெய்யப்பட்டார். அதேவேளை, சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட குடும்பஸ்தர், முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, அவரை எதிர்வரும் 15ஆம் ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு தடையின்றி எரிபொருள்

யாழ். மாவட்ட அரச அதிபர் அறிவிப்பு

இடர்காலங்களில் எரிபொருளைத் தடையின்றி பெற்றுக்கொள்ள ஊடகவியலாளர்களுக்கும் சந்தர்ப்பம் உள்ளது என யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

"உங்களது பகுதியில் உள்ள CO-OP எரிபொருள் நிரப்பு நிலையங்களின் தலைமைக் காரியாலயத்தில் விண்ணப்பக் கடிதம் ஒன்றை சமர்ப்பிக்குமிடத்து மாதாந்த கோட்டா அடிப்படையில் எரிபொருளைத் தடையின்றி பெற்றுக் கொள்ள முடியும். தொடர்சியாக நீங்கள் குறித்த நிலையத்திலேயே எரிபொருளைக் கொள்வனவு செய்ய வேண்டும். இடர்காலம் வரும்போது மாத்திரம் இந்தச் சலுகையைப் பெற முடியாது என்றார்.

கோட்டாபாய கடற்படை முகாமுக்கு

காணிகளை அபகரிப்பது தொடர்கிறது

ரவிகரன் கடும் குற்றச்சாட்டு

■ வி.யுவராத்தினம் ஈரவனன்

"முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீகக் காணிகளைக் கோட்டாபாய கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் அபகரித்துள்ளனர். இந்நிலையில், இந்தக் காணிகளை விடுவிக்குமாறு கோரி, காணிகளுக்குரிய தமிழ் மக்கள் பல தடவைகள் போராட்டங்களிலும் ஈடுபட்டிருந்தனர். ஆனாலும், அக்காணிகளை மக்களுக்கு விடுவித்து வழங்கும் நோக்கம் கடற்படைக்கோ, ஏனைய அரச திணைக்களங்களுக்கோ இல்லை. மாறாக தமிழ் மக்களின் காணிகளை எப்படியாவது அபகரித்துவிடவேண்டும் என்ற எண்ணத்துடனேயே அவர்கள் செயற்படுகின்றனர்" என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கோட்டாபய கடற்படை முகாமுக்காகத் தமது காணிகளை வழங்க சில காணி உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் க.விமலநாதன் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்துத் தொடர்பில், பதிலளிக்கும் போதே ரவிகரன் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

"முள்ளிவாய்க்கால் கிழக்கு, வட்டுவாகல் அக்கரை என அழைக்கப்படும் பகுதியிலே 617 ஏக்கர் காணிகளை கடற்படைத் தளத்துக்காக அபகரிக்கப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டு வரையில் இந்தக் காணிகளை தமிழ் மக்கள் பயன்படுத்தி வந்திருந்தனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வியர்வை துளிகளின் கூட்டமைப்பின்

சர்வதேச மகளிர் தினம்

வியர்வை துளிகளின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில், சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் கிளிநொச்சியில் நேற்று (06) நடைபெற்றன.

'பெண் தொழிலாளர்களைப் பாதுகாத்திங்கள், சீ190 சமவாயத்தை ஏற்படுத்துங்கள்' எனும் தொனிப்பொருளில் இவ்வருட பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது.

மேற்படி விடயத்தை வலியுறுத்தி, கிளிநொச்சி

கந்தசுவாமி கோவில் முன்றலில் கவனயீர்ப்பில் ஈடுபட்ட பெண்கள், பாரதி ஸ்ரார் தனியார் மண்டபம் வரையிலும் ஊர்வலமாகச் சென்றனர். அங்குள்ள தனியார் மண்டபத்தில் ஏனைய நிகழ்வுகள் நடைபெற்றன.

காத்தான்குடியில் வீதிகள் தோறும் தடுப்பூசி அட்டை பரிசோதனை

■ எம். ஸ்ஸ். எம் நூர்தீன்

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில், கொவிட் தடுப்பூசி மூன்றாவது பூஸ்டர் போடும் நடவடிக்கை வீடு வீடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் வீடு வீடாகவும் வீதிகள் தோறும் கொவிட் தடுப்பூசி போடும் அட்டையும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சுகுணனின் வழிகாட்டலின் பேரில், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் யூ எல் நஸ்ரூதீன் தலைமையில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் உதவியுடன் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் தாதியர்கள், இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் வீடு வீடாகச் சென்று தடுப்பூசி போடும் அட்டையை பரிசோதனை செய்வதுடன் மூன்றாவது தடுப்பூசி பூஸ்டர் போடாதவர்களுக்கு அவ்விடத்திலேயே தடுப்பூசியை போடவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதேபோன்று வீதிகளில் செல்கின்றவர்களிடமும் தடுப்பூசி அட்டை பரிசோதனை செய்யப்படுவதுடன் மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அவ்விடத்திலேயே தடுப்பூசியை போடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் 25ஆவது பட்டமளிப்பு விழா

■ இலங்கைநாதன்

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 25ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா, எதிர்வரும் 12, 13 ஆகிய திகதிகளில் பல்கலைக்கழக நல்லையா ஞாபகார்த்த கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ள இப் பட்டமளிப்பு விழா, பல்கலைக்கழக வேந்தர் வைத்திய கலாநிதி வே. விவேகானந்தராஜா தலைமையில் நடைபெறுவதுடன், இவ்விழாவின் முதலாம் நாள் அமர்வுகளில், விசேட அதிதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் சிரேஸ்ட பேராசிரியர் சந்தன பீ. உடவத்தவும் இரண்டாம் நாள் அமர்வுகளில் விசேட அதிதியாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே. கமில சீ.கே. பெரேராவும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

மருதமுனையில்

கேஸ் அடுப்பு வெடித்தது

■ ஏ.எல்.எம். வீனாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதேசத்தில் கேஸ் அடுப்பு வெடித்து சிறிய சம்பவம் நேற்று (05) பதிவாகியுள்ளது.

பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இமாம் கஸ்ஸாலி வீதியிலுள்ள வீடு ஒன்றில், சமையல் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, கேஸ் அடுப்பு வெடித்து சிதறியுள்ளது. எனினும் சமையலில் ஈடுபட்டிருந்த நபருக்கோ, வேறு எவருக்குமோ எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை.

கலமுனை ஆதார வைத்தியசாலைக்கு புதிய காணி

பூமி பூஜையில் சேவையாளர்களுக்கு கௌரவம்

■ காரைதீவு நிருபர் சகா

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கென கல்முனை வாடி வீட்டு வீதியில் கிடைக்கப்பெற்ற காணியில், புதிய கட்டடம் அமைப்பதற்கான பூமி பூசை வெள்ளிக்கிழமை (04) நடைபெற்றது.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் இராா. முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இப்பூமிபூசையில், குறித்த காணியை வைத்தியசாலைக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு உதவிசெய்த வைத்தியசாலையின் முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகர்களான டொக்டர் சாமித்தம்பி இராஜேந்திரன் , டொக்டர் நடராஜா ரமேஷ், கல்முனை மாநகர சபை உறுப்பினரும் சமூகசெயற்பாட்டாளருமான சந்திரசேகரம் ராஜன் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். கூடவே, இந்நிகழ்வில் வைத்தியசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

பல தடைகளை தாண்டி இந்தக் காணி வைத்தியசாலைக்கு கிடைப்பதற்குத் தொடர்ந்து பாடுபட்ட அனைவருக்கும், வைத்திய அத்தியட்சகர் டொக்டர் இரா. முரளீஸ்வரன் நன்றிகளைத் தெரிவித்தார்.

லொறியில் ஆடுகளை கொண்டு சென்ற இருவர் கைது

■ பாறுக் ஷிஹான்

சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட 30க்கும் அதிகமான ஆடுகளை கல்முனை பொலிஸார் மீட்டுள்ளனர். பெரியநீலாவணையில் உள்ள பொலிஸ் சோதனை காவலரணில், திருகோணமலை, தோப்பூர் பகுதியில் இருந்து, அக்கரைப்பற்று நோக்கி பயணித்த லொறி, பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே, 30 க்கும் அதிகமான ஆடுகள் மீட்கப்பட்டதுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை (04) இடம்பெற்றது.

அனுமதிப்பத்திரமின்றி, லொறியில் கால்நடைகளை அடைத்துச் சென்று கைதுசெய்யப்பட்ட 47, 59 வயதுகளையுடைய இரு சந்தேக நபர்களை, கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களை கண்டித்து

மட்டக்களப்பில் கவனயீர்ப்பு போராட்டம்

■ வா. கிருஸ்ணா

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்தும் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்களை நிறுத்தக்கோரியும், மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் (05) கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள் தொழிற்சங்கம் என்பன இணைந்து இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தன.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம் ஆகியவற்றின் தலைவர் வா. கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேந்திரன், ஞா. சிறிநேசன் உட்பட அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

“விசாரணைக்கு அஞ்சமாட்டேன்”

துபானசாலைகள் மற்றும் தொழிற்சாலைகள் போன்ற சொத்துகள் தன்னிடம் இல்லையெனத் தெரிவித்த இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ், “ஜனாதிபதி ஆணைக்குழு, எதிரவரும் 9ஆம் திகதி என்னை அழைத்துள்ளது. அந்த விசாரணைக்கு அஞ்சமாட்டேன்” என்றார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் 26வது மாநாடும், மகளிர் தின நிகழ்வு என இருபெரும் விழாக்கள் பதுளை மாநகரில் சனிக்கிழமை (05) நடைபெற்றன. அதில், கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கொண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசாங்கத்தின், தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால், நாடு இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் வாழ வழியின்றித் தவிக்கின்றார்கள். பெருந்தோட்டத்துறை மக்களைப் பொறுத்தவரை, அவர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். வாழ்வாதாரங்களை மேற்கொள்ள, யாசகம் எடுக்கும் நிலைக்கு, நாட்டு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஆயிரம் ரூபாய் தினச் சம்பளத்தில் பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டு, குறைவான சம்பளமே அம்மக்களுக்கு வழங்கப்படுகின்றது. அவர்கள் கொய்யும் தேயிலைத் தளிர்களை எடை (நிறை) போடுவதிலும் பல்வேறு கரணட்கள் தோட்டங்களில் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இந்நாட்டின் தேசிய வருமானத்துக்கு முதுகெலும்பாகவே எம்மக்கள் செயற்பட்டனர். எமது மக்களை உரசிப்பார்க்க எவரும் நினைக்க வேண்டாம். அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றார்.

சிறு செய்திகள்...

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் சனிக்கிழமை (05) முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது, பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி விஜித டி அல்விஸ் தெரிவித்தார்.

எச்.எம். ஹேஷா

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி ப்ரொக்டெக்ட் நிறுவனம் ஏற்பாடு செய்திருக்கும் மகளிர் தின நிகழ்வுகள், கினிகத்ஹேன கூட்டுறவு மண்டபத்தில், இம்மாதம் 9ஆம் திகதியன்று காலை 10 மணிக்கு நடைபெறும் என, அந்தச் சங்கத்தின் உப தலைவர் கே.மைத்திலி தெரிவித்தார்.

எச்.எம். ஹேஷா

ஹட்டன் பிரதேசத்தில் முட்டையின் விலை அதிகரித்துள்ளமையால் நுகர்வோர் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். முட்டையொன்றின் விலை 29 ரூபாய்க்கும் 31 ரூபாய்க்கும் இடைப்பட்ட விலையில் விற்பனைச் செய்யப்படுகின்றன என நுகர்வோர் தெரிவித்தனர்.

எச்.எம். ஹேஷா

உள்ளூர், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, கண்டியிலிருந்து தெமோதரை வரையிலும் புதிய ரயில் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கண்டியில் இருந்து காலை 7 மணிக்குப் புறப்படும் விசேட ரயில், மாலை 3 மணியளவில் தெமோதரையைச் சென்றடையும். இந்தச் சேவை, போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகவால், சனிக்கிழமை (05) ஆரம்பித்துவைக்கப்பட்டது.

சுமனசிரி குணத்திலக

கல்விப் புரட்சி வேண்டும்

■ ஸஸ்.கணேசன்

“மலையக மக்களுக்கு சேவையாற்றுவதும், அவர்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதுமே காங்கிரஸின் பிரதான நோக்கமாகுமெனத் தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும் பிரஜாசக்தி அபிவிருத்தி செயல் திட்டத்தின் பணிப்பாளர் நாயகமுமான பாரத் அருள்சாமி, கல்விப் புரட்சி மூலமே எமது சமூகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தலாம் என்பதில் காங்கிரஸ் உறுதியாக நிற்கின்றது என்றார்.

“எமது இலக்கை நோக்கிய பயணத்தில், நாம் தெளிவாக இருக்கின்றோம். கொள்கையற்ற சிலரே, எமது பயணத்தை விமர்சித்து, பாதையில் முற்களை விதைக்க முற்படுகின்றனர்” என்று தெரிவித்தார்.

கண்டி, பன்வில - ஹாத்தலகிழ் பிரிவு கௌரபொக்க, சோலங்கந்த ஆகிய தோட்டப்பகுதிகளில் தோட்ட வீடமைப்பு, சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நிர்மாணிக்கப்பட்ட கொங்ரீட் பாதைகளை, மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“கொரோனா பெருந்தொற்றால் ஏற்பட்ட நெருக்கடியில் இருந்து, நாம் தலைதூக்க ஆரம்பிக்கும்போது, ரஷ்யா மற்றும் உக்ரேனுக்கு இடையில் ஏற்பட்டுள்ள மோதலும் எமது பொருளாதாரத்துக்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உலக சந்தையில் எரிபொருள் விலை உச்சம் தொட்டுள்ளது. இப்படியான நெருக்கடிகள் இருந்தும் மலையகத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை நாம் கைவிடவில்லை. அவை உரிய வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

தனிவீடு தீயில் கருகியது

■ நுவரகூரான்

நுவரெலியா, வலப்பனை பிரதேச சபைக்குட்பட்ட உடப்புஸ்லாவா, எமஸ் தோட்டத்தில் நேற்று (06) காலை 08 மணியளவில் ஏற்பட்ட தீயால் தனி வீடொன்று முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

வீட்டிலிருந்த பெறுமதிமிக்க பொருட்கள், உடமைகள், பாடசாலை மாணவர்களின் உபகரணங்கள், சீருடைகளும் எரிந்து சாம்பலாகியுள்ளன. வீட்டிலிருந்தவர்கள் ஆலயத்துக்குச் சென்றிருந்த வேளையிலேயே, இவ்வனரத்தத்தம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்த உடப்புஸ்லாவ பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர்.

தலவாக்கலையில் தீப்பந்த போராட்டம்

■ ஸஸ்.கணேசன்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு, மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் உள்ளிட்டவற்றுக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரி தலவாக்கலையில், சனிக்கிழமை (05) தீப்பந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் அன்றிரவு 7 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட தீப்பந்த போராட்டத்தில், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் அசோக சேபால உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

மல்வத்து மாநாயக்கரை சந்தித்தது சஜித் அணி

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தலைமையிலான குழுவினர், கண்டி மல்வத்து விஹாரைக்கு நேற்று (06) சென்றிருந்தனர்.

சஜித்துடன் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பியும் சென்றிருந்தார். அவர்கள், மல்வத்து மாநாயக்கர் அதிவணக்கத்துக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர்.

கிளியை கூண்டில் அடைத்தவர் கைது

■ மஹ்ஸூஸ் கீர்த்திரத்ன

பாதுகாப்பான பறவையென இனங்காணப்பட்ட கிளியை, கூண்டொன்றில் அடைத்து தொந்தரவு கொடுக்கும் வகையில் பராமரித்த குற்றச்சாட்டின் கீழ், மாத்தளை-உக்குவளை கல்ஓயா பிரதேசத்தைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை ரஜ்ஜம்மன வனவிலங்கு அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே, கிளி மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர், மாத்தளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிலம்பாட்டம் எமது அடையாளம்

■ மலையகவாக்குகள்

சிலம்பாட்டம் தற்காப்பு கலை மட்டுமல்ல, அது தமிழர்களின் அடையாளம். எனவே, இந்தத் தற்காப்பு கலையை, கொட்டகலை பகுதியில் நடத்துவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன் எனத் தெரிவித்த தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், எதிர்காலத்தில் மிகப்பெரிய சிலம்பாட்ட போட்டியொன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்வேன் என்றார்.

இரண்டாவது சிலம்பாட்ட போட்டியும் பரிசளிப்பு விழாவும் கொட்டகலையில் நேற்று (06) நடைபெற்றது. இதில், சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு, முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியில் இந்தக் கஷ்டத்துக்கு மத்தியிலும், சிலம்பாட்டத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை வரவேற்கின்றேன். அதேபோல, நெருக்கடி

நிலைமை, இன்னும் நில நாள்களுக்குள் மாறும் என்றார்.

சிலம்பாட்ட பெடரேசன் செயலாளர் கே.ஆர் திவாகரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற சிலம்பாட்ட போட்டியில், வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 200 போட்டியாளர்கள் வரை கலந்து கொண்டனர். இதில் தொடுகை சிலம்பாட்டம், வீச்சில் சிலம்பாட்டம் ஆகிய போட்டிகள் இடம்பெற்றதுடன் கண்காட்சி போட்டிகளும் நடைபெற்றன.

இதன் போது, மலையகத்தில் பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்தவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில், கொட்டகலை பிரதேச சபையின் தவிசாளர் ராஜமணி பிரசாந்த், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தலவாக்கலையில் சாரதிகள் தடுமாற்றம்

■ பீ.கேதீஸ்

தலவாக்கலை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சில நாள்களாக நிலவும் டீசல் தட்டுப்பாடு காரணமாக, தலவாக்கலையிலிருந்து தோட்டங்களுக்குச் செல்லும் பல பாதைகளுக்கான தனியார் பஸ் சேவைகள் தடைப்பட்டுள்ளதாக பஸ் சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, தலவாக்கலையிலுள்ள எரிபொருள் நிரப்பு

நிலையங்களில் பஸ்கள், ஏனைய வாகனங்கள் நீண்ட வரிசையில் நேற்றும் (06) காத்திருப்பதை காணமுடிந்தது.

இரண்டு, மூன்று நாள்களுக்கு ஒருமுறை எரிபொருள் நிலையங்களுக்கு அனுப்பப்படும் டீசல், வரிசையில் காத்திருக்கும் வாகனங்களுக்கு போதாது. எனினும், தனியார் பஸ்களுக்கு முன்னுரிமை வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனா வலியுறுத்தப்பட்டுள்ளது.

கருணை இல்லம் அமைப்புக்கு ஓராண்டு

■ எம். ஸல்ஸலூரா

கருணை இல்லம் என்ற புலம்பெயர் அமைப்பின் ஓராண்டு பூர்த்தி விழா, ஹாலி-எல சமூக விடுதியில், நேற்று (06) வைபவ ரீதியாக நடைபெற்றது.

கருணை இல்லத்தின் தலைவர் பி. சிவகுமாரின் வழிகாட்டலின் கீழ், அமைப்பின் பதுளை மாவட்ட இணைப்பாளர் எஸ். வத்சலாவின் ஏற்பாட்டுக்கு அமையவும் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதில், ஊவா வெல்லஸ்ஸ

பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மா. ரூப்பவதனன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். ஊவா தொழிலாளர் அபிவிருத்தி நிலைய நிறைவேற்றுப் பணிப்பாளர் வீ. அந்தனீஸ் உட்பட பிரமுகர்கள் பங்கேற்றனர்.

பெக்கோவை கொண்டு ‘நிடிகும்பா’ அழிப்பு

■ மஹ்ஸூஸ் கீர்த்திரத்ன

மாத்தளை, வரகாமுர, தெஹிமிட்டிய ஆகிய பிரதேசங்களில், விசாலமான முறையில் பரவும் ஓர் ஊடுருவும் இராட்சத தாவரமான நிடிகும்பா (Mimosaceae) வை அழிக்கும் செயற்பாடுகள், சிரமதானத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டன.

பெக்கோ, இயந்திரத்தை கொண்டே இந்தத் தாவரத்தை அழிக்கும் செயற்பாடுகள், சனிக்கிழமை (05) முன்னெடுக்கப்பட்டன. மாத்தளை பொலிஸாருடன் இணைந்ததாக இந்தச் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த இராட்சத தாவரம், மிக விரைவாகவும் விசாலமாகவும் வளர்வதால், ஏனைய தாவரங்கள் வளரமுடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். அதனையடுத்தே, நிடிகும்பாவை அழிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

சாமானியர்களை கிலிகொள்ளச் செய்யும் பகலிரவு 'இருட்டு'கள்

பட்டப்பகலில் கூட, வீட்டைவிட்டு வெளியேற முடியாத நிலைமை, நாட்டுக்குள் ஏற்பட்டுள்ளது. அந்தளவுக்கு கொள்ளை, அச்சுறுத்தி அபகரித்தல் என்பன அதிகரித்துவிட்டன. அன்றாடம் ஜீவியம் நடத்துவதற்குப் போதைக்காகவும், மேலே குறிப்பிட்ட குற்றச்செயல்களில் பலரும் இறங்கியுள்ளனர்.

சேவையில் ஈடுபடும் பஸ்களின் எண்ணிக்கை குறைந்து விட்டதால், கிடைக்கும் பஸ்களில் பலரும் தொற்றிக்கொள்கின்றனர். சன நெரிசலைப் பயன்படுத்தி, முடிச்சுமாற்றிகள் தமது கைவரிசையை மிக இலாவகமாகக் காட்டிவிடுகின்றனர்.

வீட்டிலுள்ளோர் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கும் நேரங்களில், திருடர்கள் கதவு, யன்னல்கள் போன்றவற்றைத் திறந்து, வீட்டை முழுமையாகச் சுத்தம் செய்துவிடுகின்றனர். கைதேர்ந்தவர்கள் தப்பித்துவிடுகின்றனர்; புதியவர்கள் சிக்கிக்கொள்கின்றனர்.

வாளிலையிலும் மாற்றம் ஏற்பட்டுமையால், மின்விசிறிகளுக்கே பழக்கப்பட்டுபோன பலரும், வீட்டுக் கதவுகளைத் திறந்துவைத்துக்கொண்டே அயர்ந்துவிடுகின்றனர். அதனைத் திருடர்கள், தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

தங்களைப் பாதுகாப்புத் தரப்பினர் எனக் காட்டிக்கொள்ளும் சிலர், வீடுகளுக்குள் சென்று சோதனை எனும் பெயரில் வீட்டையே சுத்தம் செய்துவிடுகின்றனர். இவற்றுக்கெல்லாம், 'மின்வெட்டு' பிரதான காரணமாக அமைந்துவிடுகின்றது.

மின்வெட்டின் நேரம், நாளுக்கு நாள் அதிகரித்துகொண்டே செல்கின்றது. இதனால், பல தொழிற்சாலைகள் நேரகாலத்துடன் மூடப்பட்டுவிடுகின்றன. மேலதிக நேரத்தை நம்பியிருக்கும் பணியாளர்கள், கையைப் பிசைந்து கொண்டிருக்க வேண்டிய துரப்பாக்கிய நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

வீட்டுக்குள்ளும் வீட்டுக்கு வெளியிலும் செல்லமுடியாத அளவுக்கு நாட்டின் நிலைமை மோசமாகிக்கொண்டிருக்கின்றது. இருட்டில் தனியாகச் செல்வோரை வழிமறித்து, கிடைப்பதை அபகரித்துக் கொண்டு சென்றுவிடுகின்றனர். இரவில் மட்டுமன்றி, பகலிலும் இருட்டாக இருப்பதால், சாதாரண மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

மின்வெட்டுடன் சமையல் எரிவாயு தட்டுப்பாடும் மீண்டும் தலை தூக்கிவிட்டது. இதனால், பெரும் நகரங்களிலுள்ள ஹோட்டல்களின் கதவுகளில், 'காஸ் இல்லை' என்று எழுதப்பட்ட பதாகை தொங்கவிடப்பட்டுள்ளது. அங்கு வேலை செய்தவர்கள், வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மூவேளையும் ஹோட்டல்களையே நம்பியிருக்கும் பலரும், கீழும் மேலுமாக முழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எதற்கெடுத்தாலும் வரிசையில் நிற்கவேண்டிய 'வரிசை யுகம்' நாட்டில் ஏற்பட்டுள்ளது. சமையல் எரிவாயுவுக்கான தட்டுப்பாடு, உடனடியாக நீக்கப்படாவிடின், சாப்பாட்டுக்கும் வரிசையில் நிற்கவேண்டிய நிலைமையே ஏற்படும். ஆங்காங்கே, சில ஹோட்டல்களில் அவ்வாறான வரிசைகளைத் தற்போது காணமுடிகின்றது.

அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகத்தால் ஏற்படும் இழப்புகள், சாமானியர்களையே துன்பத்தில் தவிக்க வைக்கின்றன என்பதை கவனத்தில் எடுக்கவேண்டும். மக்கள் பிரதிநிதிகள் ஒருவருக்கு ஒருவர் குற்றச்சாட்டுதலை முன்வைத்து, தப்பித்துக்கொள்ள முயல்வதை விடவும் கட்சி, அரசியல் பேதங்களை மறந்து, சகலரும் ஒரே மேசையில் அமர்ந்து, மக்கள் பிரச்சினையை தீர்ப்பதற்கான தீர்வுகளைத் தேடுவதே, காலத்தின் தேவையாகுமென நினைவூட்ட விரும்புகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





வாழ்வியல் தரிசனம்

உருவம் அற்ற காலச் சுழற்சி, பல விஸ்வரூப சாதனைகளை ஏற்படுத்திய வண்ணமே உள்ளது. ஊழைப்பவனுக்கு காலம் கழிவதே தெரியாது. சோம்பேறிகளுக்கு இரவும் பகலும் ஒன்றேதான்.

நேரத்தை சரியானபடி பயன்படுத்துபவன், புத்திசாலி மட்டுமல்ல, அதிர்ஷ்டத்தைத் தொடர்ந்து பெறுகின்றான். இந்தப் பூமியில் நிகழ்பவற்றை கண்டுகொள்ளாமல் இருப்பவர்கள், தமது அறியாமையை உணர்ந்து கொள்வதில்லை. ஒவ்வொருவரும் தங்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்தாலே போதுமானது; வையகம் செழிக்கும்.

உலகம் அமைதியாக இருக்க சமாதானம், பொறுமை அத்தியாவசியமானது. ஆனால், போராட்டமும் துணிவும் இன்றி வாழமுடியாது. காலத்தின் ஒவ்வொரு துளிகளும் எமக்கு அவசியமானவை. விழிகள் விரிய எம்மைப் பாதுகாக்க வேண்டியுள்ளது.

கல்விக்குத் தடை, பதவி உயர்வுக்குத் தடை, மனம் திறந்து பேசவும் தடை என, வாழ்க்கையில் எதிர்ப்படும் தடைகளை உடைத்து, முன்னேறினால்தான் நேரத்தை நேர்த்தியான அனுபவித்தவர்கள் ஆவோம். வெற்றுப் போலி வாழ்க்கையை உலகம் விரும்பாது.

பதுத்தியூர் பாலை. வரீரவரநாதன்

அடுத்த ஜனாதிபதி யார்?

கனவு காணும் அடுத்த ஜனாதிபதிகள்

என்.கே. அஷோக்பரன்

மின்சாரம் இல்லை; எரிவாயு இல்லை; எரிபொருள் இல்லை; அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், தட்டுப்பாடு; பொது மக்களின் அன்றாட வாழ்வு அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்கிறது.

கோட்டாவுக்கு வாக்களித்தோர் பலவிதம். அப்பட்டமான இனத்துவேசத்தின் காரணமாக வாக்களித்தோர் ஒரு வகையெனில், கோட்டா, பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது, கொழும்பை சுத்தம் செய்து அழகுபடுத்தியதைப் போல, நாட்டையும் ஆட்சியையும் சுத்தம் செய்து அழகுபடுத்திவிடுவார் என்று நம்பி வாக்களித்தோர் இன்னொரு வகை.

இன்று, இந்த எல்லா வகையினரும் மின்சாரமின்றித் தத்தளிக்கிறார்கள். எரிவாயு, எரிபொருளுக்காக வரிசையில் காத்துக் கிடக்கிறார்கள். ஏறியிருக்கும் விலைவாசியைச் சமாளிக்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கிறார்கள்.

வெற்றி வீரனாகப் பார்க்கப்பட்ட கோட்டா, இன்று அரசியல் கோமாளியாக, அவருடைய ஆதரவாளர்களாலேயே பார்க்கப்படுகிறார். அவருடைய தேர்தல் பிரசார கீதம், இன்று நக்கலுக்குக் நையாண்டிக்குமானதொரு பாடலாக மாறியிருக்கிறது. இன்றைய நிலையில், 'மொட்டு' ஆட்சியில், 'கோட்டாவும் தோல்வி; ராஜபக்ஷர்களும் தோல்வி'. இதுதான் நிதர்சனம்!

ஆனால், இலங்கை மக்கள் மீது, ராஜபக்ஷர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. குறிப்பாக, இலங்கை மக்களின் ஞாபகத்திறன் குறைவின் மீது, அதீத நம்பிக்கை இருக்கிறது. இரு துருவங்களுக்கு இடையே மாறி மாறி அரையும் 'பெண்டுலம்' போல, இலங்கை வாக்காளர்கள் இரண்டு தெரிவுகளையே மாறி மாறித் தெரிவுசெய்து கொண்டிருப்பார்கள் என்பது, ராஜபக்ஷர்களுக்கு நன்றாகவே தெரியும்.

ஆகவே, அந்த இரண்டு தெரிவுகளில் ஒன்றாகத் தாம் இருக்கும் வரை, ராஜபக்ஷர்கள் கவலைகொள்ளப் போவதில்லை. இந்தமுறை ஆட்சியை இழந்தாலும், அடுத்த முறை ஆட்சியைக் கைப்பற்றி விடலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு.

ஏனென்றால், இலங்கை வாக்காளர்கள், அவ்வளவு தூரம் பலவீனமான நினைவுத்திறனும் பலமான உணர்ச்சிவசப்படும் தன்மையையும் கொண்டவர்கள். ஆகவே, வரப்போகும் தேர்தலில், தமது தோல்வி நிச்சயம் என்பதை ராஜபக்ஷர்கள் உணர்ந்துவிட்டால், அடுத்து அடுத்து ஆட்சிக்கு வரப்போகிறவர்கள், இலகுவில் நாட்டை மீட்டுவிட முடியாத ஆழத்தில்தான், நாட்டைப் புதைத்துவிட்டுப் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ராஜபக்ஷர்கள் பரம்பரை அரசியல்வாதிகள். அதிகாரம்தான் அவர்களின் இலக்கு. அதைக் கைப்பற்ற, அவர்கள் எந்த எல்லைக்கும் போவார்கள் என்பதற்கு, வரலாறு சாட்சி.

ராஜபக்ஷர்களின் நிலை இவ்வாறு இருக்கையில், ராஜபக்ஷர்களின் ஆட்சியின் பெருந்தோல்வியின் காரணத்தால், ராஜபக்ஷர்களுக்கு எதிராக இன்று பொதுமக்களிடையே எழுந்திருக்கும் மனநிலையைக் கணித்துக்கொண்டு, அடுத்த தேர்தலில் ராஜபக்ஷர்கள் தோற்றுவிடுவார்கள்; ஆகவே, அடுத்தது நான் தான் ஜனாதிபதி; என்னுடைய கட்சிதான் ஆளுங்கட்சி என்ற கனவில் பலரும் இயங்கத் தொடங்கி உள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஒரு புறம்; ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்தாலும், '43 படையணி' என்று ஜனாதிபதி கனவுடன் தனித்து இயங்கத் தொடங்கியுள்ள பாட்டலி சம்பிக்க; பிரதான கட்சிகளின் மீதும் அதன் வேட்பாளர்கள் மீதும் மக்கள் கொண்டுள்ள வெறுப்பை, தனக்கு மூலதனமாக்கத் துடிக்கும் அநுர குமார; 'என் தைத் இன்னும் முடியவில்லை' என, மீண்டும் தலைதூக்க எத்தனிக்கும் மைத்திரிபால சிறிசேன; கோட்டாவரால் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள உதய கம்மன்பில, விமல் வீரவன்ச என, ஜனாதிபதி தேர்தல் வருவதற்கு இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் இருக்கின்ற நிலையில், இப்போது பலரும் ஜனாதிபதி கனவில் இயங்கத் தொடங்கிவிட்டார்கள்.

தமது ஆட்சியின் தோல்வி ராஜபக்ஷர்களுக்கு கடும் அதிருப்தியைத் தந்தாலும், தமது எதிர்க்கட்சிகள் பிரிந்திருப்பதைக் கண்டு ராஜபக்ஷர்களுக்கு மகிழ்ச்சியே! அதிலும் குறிப்பாக, ராஜபக்ஷர்களின் பெரும் வாக்குவங்கியான 'சிங்கள-பௌத்த' பெருந்தேசியவாத வாக்குவங்கியைக் குறிவைத்து பாட்டலி சம்பிக்க, உதய கம்மன்பில, விமல் வீரவன்ச ஆகியோர் களமிறங்கியிருப்பது, ராஜபக்ஷர்களிடமிருந்து வெளியேறும் அந்த வாக்குவங்கியின் வாக்குகள், மற்றோர் இடத்தில் சென்று குவிவதற்குப் பதிலாக மூன்று, நான்கு என உடையப்போகின்றது.

மேலும், மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸ, அநுர குமார என பிரதேச ரீதியிலும் கட்சி ரீதியிலும் வாக்குகள் சிதைவடையும். இதுவும் ராஜபக்ஷர்களுக்கு சாதகமானதே.

இதனால்தான், இன்றைய ஆட்சி எவ்வளவு மோசமானதாக இருந்தாலும், அதற்கான எதிர்ப்பு என்ற ஒன்றே இல்லாதது போன்ற நிலைதான் இருக்கிறது.

யுத்தமொன்றில் எதிர்க்கும் படைகளின் அளவு, எவ்வளவு பெரிதாக இருந்தாலும், அந்தப் படைகளிடையே ஒருங்கிணைவு இல்லாவிட்டால், அவற்றால் வினைத்திறனாக எதையும் செய்ய முடியாது. இதுதான் இன்றைய எதிர்க்கட்சிகளின் நிலை.

2015 - 2019 வரை ராஜபக்ஷர்கள் எப்படி சிம்மசொப்பனமானதோர் எதிர்க்கட்சியாக இருந்தார்களோ, அதைப்போன்றதோர் எதிர்க்கட்சி இப்போது இல்லை. அரசியல் அனுபவம் குறைவானவர்களினதும் சோம்பேறிகளினதும் கூடாரமாகத்தான் இன்றைய எதிர்க்கட்சிகள் இருக்கின்றன. இதற்கான ஒரே நிரூபணம், இன்றைய நிலையில் ராஜபக்ஷர்கள் எதிர்க்கட்சியாக இருந்திருந்தால், எப்படி இருந்திருப்பார்கள் என்ற சிந்தனைதான்.

ராஜபக்ஷர்கள் மோசமான ஆட்சியாளர்கள்; ஆனால், திறமையான அரசியல்வாதிகள். இன்றைய எதிர்க்கட்சிகள் ஆட்சியிலும் மோசம்; அரசியலிலும் மோசம்.

இது இன்றைய நிலைதான்; ஜனாதிபதி தேர்தல் நெருங்கும்போது, எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து, ஒரு பொதுவேட்பாளரை ஆதரிக்கும் என்று நம்புவோர் பலர் உளர். அவர்களது நம்பிக்கை யதார்த்தமாவதற்கான வாய்ப்புகள் நிறையவே உள்ளன.

ஆனால், அது ராஜபக்ஷர்களை அடுத்த தேர்தலில் தோற்கடித்தாலும், அதற்கடுத்த தேர்தலில் இன்னும் பலத்துடன் ஆட்சிக்குக் கொண்டுவந்துவிடும். இதுதான் 2015 - 2019இல் நடந்தது.

ஏன், அப்படி என்று பலரும் வினவலாம்? அது நல்ல கேள்வி. 'பொது வேட்பாளர்' என்பது, ஒர் அரசியல் கட்சி அல்ல; அது ஒர் அரசியல் கூட்டும் அல்ல; அது ஒர் அரசியல் சக்தியும் அல்ல. 'பொது வேட்பாளர்' என்பது, ஒரு சந்தர்ப்பவாத நகர்வு. அதன் நோக்கம், ராஜபக்ஷர்களை ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிப்பது மட்டுமே!

அதற்கு மேல், அந்தச் சந்தர்ப்பவாதக் கூட்டுக்கு நோக்கமும் கிடையாது; நோக்கமாக எதை முன்வைத்தாலும், அதனை நிறைவேற்றுவதற்கான இயலுமையும் கிடையாது.

வெவ்வேறு அரசியல் சிந்தனைகள், சித்தாந்தங்கள், நம்பிக்கைகள், அணுகுமுறைகள் கொண்டவர்கள், ஒரே கட்சியாக இயங்க முடியாது. மைத்திரிபாலவும் ரணில் விக்கிரமசிங்கவும் ராஜபக்ஷர்களைத் தோற்கடிக்க ஒன்றிணையலாம். அதைத் தாண்டி, அவர்களின் அரசியலில் வேறென்ன ஒற்றுமை இருக்கிறது?

அநுர குமாரவும், சஜித் பிரேமதாஸவும் ராஜபக்ஷர்களை தோற்கடிக்க ஒன்றிணையலாம். அதைத் தாண்டி ஒன்றிணைந்து இயங்க, அவர்களால் முடியுமா? தமிழ்க் கட்சிகளும் அல்லது முஸ்லிம் கட்சிகளும் அல்லது வீரவன்சவும் கம்மன்பிலவும் ராஜபக்ஷர்களை தோற்கடிக்க ஒன்றிணையலாம்; அதற்கு மேல் அவர்களின் அரசியல், ஒன்றோடொன்று இயைபுடையதா? இதுதான் 'பொது வேட்பாளர்' என்ற முயற்சி தோல்வியடைவதற்கான மூலகாரணம்.

ராஜபக்ஷர்களைத் தோற்கடிக்க அது பயன்படும். அதற்குப் பின்னர் அது படுதோல்வியடையும். அந்தத் தோல்வியால் கசப்புறும் மக்கள், மீண்டும் ராஜபக்ஷர்களைப் பலத்துடன் ஆட்சிக்குக் கொண்டு வருவார்கள்.

அப்படியானால், இதற்கான தீர்வு என்ன? இது நல்ல கேள்வி. மிகக் கடினமான கேள்வியும் கூட! தீர்வுக்கு முதற்படி, இலங்கையில் பலமானதோர் எதிர்க்கட்சி கட்டியெழுப்பப்பட வேண்டும். 2019, 2020 தேர்தல்களில், ராஜபக்ஷர்கள் பெற்ற பெருவெற்றியின் மூலதனம், ராஜபக்ஷர்கள் கட்டியெழுப்திய 'ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன' என்ற கட்சி.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்ற பெருவிருட்சத்திலிருந்து, ராஜபக்ஷ ஆதரவாளர்களைப் பிரித்தெடுத்து, தமக்கான தனிக்கட்சியை ஸ்தாபித்தமைதான் அவர்களது பெருவெற்றியின் அடிப்படை. ஆனால், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு மாற்றானதொரு பலமான எதிர்க்கட்சி இலங்கையில் இல்லை.

ஐக்கிய மக்கள் சக்தி, தன்னைப் பிரதான எதிர்க்கட்சியாக முன்னிறுத்தினாலும், அது ஒரு கட்சியே அல்ல; பல கட்சிகளினதும் கூட்டு. அவ்வளவுதான்! ராஜபக்ஷர்களின் வெற்றி என்பது, வெறுமனே தமக்கான கட்சியை உருவாக்கியது மட்டுமல்ல, இலங்கையின் பழம்பெருங்கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியையும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை செல்லாக்காசாக்கியதும் தமது வெற்றியைப் பெருவெற்றியாக்கியதுமாகும்.

ஆகவே, ஜனாதிபதி கனவில் காலம் கழிக்காமல், பலமானதோர் எதிர்க்கட்சியை (கூட்டணியை அல்ல) கட்டியெழுப்பும் கைங்கரியத்தை, அரசியல் அறிவுள்ளவர்கள் முன்னெடுக்காதவரை, ராஜபக்ஷர்களின் அரசியல் தொடரும்.

அடுத்த தேர்தலில், அவர்கள் தோற்கலாம்; ஆனால், தோற்றதற்கும் சேர்த்து, அதற்கடுத்த தேர்தலில் அவர்கள் எழுவார்கள். 1970இல் தோல்வியடைந்த ஐக்கிய தேசிய கட்சி, 1977இல் பெருவெற்றி காண, சிறிமாவின் மோசமான ஆட்சி மட்டும் காரணமல்ல; ஜே.ஆர் என்ற பலமான தலைமையின் கீழ், பலமானதொரு கட்சியாக ஐக்கிய தேசிய கட்சி உருவாகி நின்றதும் முக்கிய காரணம் ஆகும். இது ஜனாதிபதி கனவில் உள்ளோரின் கவனத்துக்கு!

கடிதங்கள்

அம்பாறை மாவட்ட கடலோரப் பிரதேசங்கள்

கடலுக்குள் காணாமல் போகும் அபாயம்

சாய்ந்தமருது முகத்துவாரப் பகுதியின் பாதுகாப்புக்காகப் போடப்பட்டுள்ள மணல் மூட்டைகள், பாரிய கடலரிப்பை அடுத்து கடலுக்குள் அமிழ்ந்து போகும் அபாயத்தை எட்டியுள்ளன.

அம்பாறை மாவட்ட கடற்கரையோரப் பிரதேசங்கள் யாவும், பெரும் கடலரிப்புக்கு உள்ளாகி வருவதுடன், அதனை அண்டிய நிலப்பரப்புகள், மீனவர் வாடிகள், மைதானங்கள், மையவாடிகள் உள்ளிட்ட பகுதிகள், கடலுக்கு இரையாகி வருகின்றன.

பாரியளவிலான கடலரிப்பு, தற்போது அடிக்கடி நிகழ்வதால் தோணிகள், படகுகள், வலைகள் போன்ற மீன்பிடிக் கலங்களைப் பழுதுபார்ப்பதற்கான இடப்பரப்பு இல்லாமல் போயுள்ளதுடன், படகுகளின் உதிரிப்பாகங்கள் உள்ளிட்ட உபகரணங்களைப் பாதுகாப்பதற்கான களஞ்சிய வசதிகளும் அற்றுப் போயுள்ளதாகவும் மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, ஒலுவில் துறைமுகத்தை அண்டிய கடற்பரப்பு விரிவடைந்ததன் காரணமாக, பாரிய கடலரிப்பு தொடர்ந்தால், அம்பாறை மாவட்ட கடலோரப் பிரதேசங்கள் பலவும் கடலுக்குள் காணாமல் போகும் அபாயம் ஏற்படும்.

எனவே, இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுத்து, அம்பாறை மாவட்ட கடலோரப் பிரதேசங்களைப் பாதுகாக்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

அ. அஸ்வர்

DFCC வங்கி CIMA உடனான

கூட்டாண்மை தொடர்கின்றது

இலங்கை முகாமைத்துவ பட்டயக் கணக்காளர்கள் கற்கை நிலையத்தின் (CIMA) "Corporate Partnership Programme" நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீண்டும் DFCC வங்கி கைகோர்த்துள்ளது. தொடர்ந்து 3 ஆவது ஆண்டாக இந்தக் கூட்டாண்மையை DFCC வங்கி அறிவித்துள்ளது.

CIMA Corporate Partnership Programme நிகழ்ச்சித்திட்டம் என்பது CIMA மற்றும் வணிகத்துறை தலைவர்களுக்கு இடையேயான கூட்டாண்மைகளின் மதிப்புமிக்க வணிக வலையமைப்பாகும். மேன்மையை நிலைநாட்டும் ஆர்வமும், உலகளவில் போட்டித்திறனைத் தோற்றுவிக்கும் வகையில் மாற்றத்திற்கு வித்திடுகின்ற தலைவர்கள் மற்றும் ஒருங்கிணைந்த சிந்தனையாளர்களை உருவாக்குவதில் பங்களிக்கும் ஆர்வம் கொண்ட வணிகத் தலைவர்களின் வலையமைப்பாக இது காணப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம், DFCC வங்கியானது, CIMA கற்கைத் துறை திறமையாளர்களுடன் ஈடுபடவும், ஆட்சேர்ப்பு செய்யவும், எதிர்காலத் தலைவர்கள் மற்றும் ஒத்த எண்ணம் கொண்ட நிர்வாக அதிகாரிகளுடன் தொடர்புகளைப் பேணும் வலையமைப்பை ஏற்படுத்தி, கணக்கியல் தொழிலில் புத்தாக்கத்தை ஆதரிப்பதோடு, எதிர்காலத்திற்கான அறிவு மற்றும் நுண்ணறிவுகளை காத்திரமான உரையாடல் மூலம் தமக்கிடையில் பகிர்ந்து கொள்ள முடியும்.

இந்தக் கூட்டாண்மையின் முக்கியத்துவம் குறித்து DFCC வங்கியின் மனிதவளத்துறை சிரேஷ்ட துணைத் தலைமை அதிகாரியான சொனாலி ஐயசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "இந்தக் கூட்டாண்மையானது, மேன்மையுடன் சிறந்து விளங்குவதற்கான ஆர்வத்தை ஊக்குவித்தல் மற்றும் உலக அளவில் போட்டித்திறன் கொண்ட உலகத் தரம் வாய்ந்த மாற்றத்திற்கு வித்திடுகின்ற தலைமைத்துவத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பது ஆகிய வங்கியின் நோக்கங்களுடன் முழுமையாக இணங்குகிறது. இவ்வாறாக, CIMA Sri Lanka உடன் தொடர்ந்து 3 ஆவது ஆண்டாக இந்தக் கூட்டாண்மைக்குள் காலடியெடுத்து வைப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். உயர்தர திறமைசாலிகளை அடையாளம் கண்டு உள்வாங்குதல், வலுவான தொடர்பு வலையமைப்பு வாய்ப்புகளை உருவாக்குதல், கற்றல், மேம்பாட்டை மேம்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் இது எங்களுக்கும், வணிகத் துறையில் உள்ள மற்றவர்களுக்கும் மதிப்பை உருவாக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். எனவே, CIMA மற்றும் ஏனைய வர்த்தகத்துறை கூட்டாளர்களுடன் இணைந்து செயற்படுவதால், உள்நாட்டிலும் உலக அளவிலும் ஒரு வெற்றிகரமான மற்றும் நிலையான பொருளாதார கட்டமைப்பினை முன்கூட்டியே தோற்றுவிப்பதில் நாங்கள் ஒத்துழைத்து பணியாற்றி வருகிறோம்" என்று தெரிவித்தார்.

CIMA Corporate Partner என்ற வகையில், DFCC வங்கி CIMA-தகைமை பெற்ற பணியாளர்களுக்கு அவர்களின் வருடாந்த உறுப்புரிமைக் கட்டணத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ திருப்பிச் செலுத்தும் வகுதி போன்ற சில விடேட சலுகைகள் மற்றும் வாய்ப்புகளை வழங்குகிறது. திறன்கள், தகுதி மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றில் சிறந்து விளங்குவதற்கு உறுதிபூண்டுள்ள ஒரு தொழில்தருநர் என்ற வகையில், DFCC வங்கி, CIMA கற்கை நெறியை மேற்கொள்பவர்களுக்கு அவர்களின் ஏனைய உயர் கற்கைகள் மற்றும் தொழில்முறை கற்கைப் பாடநெறிகள், பட்டப்படிப்பு கற்கைநெறிகள், வணிக நிர்வாக முதுமாணி (MBA) கற்கைகள் உட்பட, முழு அல்லது பகுதியளவு கடன் உதவியைப் பெறுவதற்கான தெரிவை வழங்குகிறது.

நெருக்கடி நிறைந்த 2021 ஐ

கொமர்ஷல் வங்கி திடமாகப் பூர்த்தி



கொமர்ஷல் வங்கி குழுமம் 2021ஆம் ஆண்டை ரூ. 163.675 பில்லியன் மொத்த வருமானத்துடன் பூர்த்தி செய்துள்ளது. இது 7.70 சதவீத வளர்ச்சியாகும். கலவையான அதிர்ஷ்டத்துடன் கூடிய இந்த ஆண்டில் வட்டி வருமானம் 80 சதவீதத்துக்கும் அதிகமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி, அதன் கிளைகள் மற்றும் இணை நிறுவனங்கள் என்பனவற்றைக் கொண்டு கொமர்ஷல் வங்கிக் குழுமம் என அறியப்படுகின்றது. இந்தக் குழுமம் 2021 டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் ரூ. 132.818 பில்லியனை வட்டி வருமானமாகப் பதிவு செய்துள்ளது. இது 7.04 சதவீத வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. வருடத்துக்கான வட்டி செலவினம் 9.31 சதவீத்தால் குறைவடைந்து ரூ. 66.402 பில்லியனாக உள்ளது. குழுமத்தின் நேற்பு வட்டி வருமானம் ரூ. 66.416 பில்லியன்களாகும். இது 30.56 சதவீத வளர்ச்சியாகும். ஆண்டின் கடைசிக் காலாண்டு வட்டி வருமானம் 17.84 சதவீத்தால் வளர்ச்சி அடைந்து ரூ. 36.592 பில்லியனாக உள்ளதை காட்டி நிற்கின்றது. இது குழுமத்தின் மூன்று மாத கால மொத்த வருமானம் ரூ. 43.625 பில்லியனில் 83 சதவீத்துக்கும் அதிகமாக உள்ளது. 2020ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் 13.76 சதவீதத்துக்கும் அதிகமாக இது உயர்ந்துள்ளது. குறிப்பிட்ட காலத்தில் வட்டி செலவுகள் 4.30 சதவீத்தால் அதிகரித்து ரூ. 17.709 பில்லியனாக இறுதிக் காலாண்டில் வட்டி வீதங்களின் அதிகரிப்பு காரணமாக வளர்ச்சி அடைந்துள்ள நிலையில் இது பதிவாகி உள்ளது.

ஆண்டுக்குரிய மொத்த செயற்பாட்டு வருமானம் 21.98 சதவீத்தால் வளர்ச்சி கண்டு ரூ. 93.598 பில்லியனாக உள்ளது. வங்கியின் குறைபாட்டு கட்டணங்கள் மற்றும் ஏனைய நடட்டங்கள் 17.37 சதவீத்தால் அதிகரித்து ரூ. 25.140 பில்லியன்களாக உள்ளது.

நிதிச் சேவைகள் மீதான VAT வரிக்கு முந்திய செயற்பாட்டு இலாபம் குறிப்பிடத்தக்க வகையில் 33.58 சதவீதமாக வளர்ச்சி கண்டு 38.801 பில்லியன்களாக உள்ளது. குழுமத்தின் நிதிச் சேவைகள் மீதான VAT வரி குறிப்பிட்ட ஆண்டில் 28.99 சதவீத வளர்ச்சி கண்டு ரூ. 5.845 பில்லியனாக உள்ளது. அதேவேளை வரிக்கு முந்திய இலாபம் 34.41 சதவீத்தால் அதிகரித்து ரூ. 32.957 பில்லியனாக உள்ளது. வருமானவரி கட்டணங்கள் குறைவான 16.60 சதவீத்தில் அதிகரித்து 8.667 பில்லியனாக உள்ளது. வருமானவரி வீதக் குறைப்பே இதற்கு காரணம். குழுமத்தின் வரிக்குப் பிந்திய இலாபம் குறிப்பிட்ட ஆண்டில் ரூ. 24.290 பில்லியனாக உள்ளது. இது 42.16 சதவீத வளர்ச்சியை அடைந்துள்ளது. இது முன்மொழியப்பட்டுள்ள கூடுதல் வரிக்கு முந்திய நிலையாகும். குறிப்பிட்ட சட்டம் இந்த அறிக்கையிடலின் போது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. எனவே மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் இதற்கான ஒதுக்கீடு இடம்பெறவில்லை.

கேரளா

டாட்டூ கலைஞர் மீது 'மொடல்' அழகி பாலியல் புகார்



டாட்டூ கலைஞர் மீது, பிரபல மொடல் அழகியொருவர் உட்பட 3 இளம் பெண்கள் பொலிஸ் நிலையத்தில் பாலியல் புகார் அளித்துள்ள சம்பவம் கேரளாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கேரளாவில் அண்மைக்காலமாக உடலில் டாட்டூ வரைந்து கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. குறிப்பாக மொடல் அழகிகள், நடிகைகள், இளம் பெண்கள் டாட்டூ வரைந்து கொள்வதில் அதிகளவு ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

இந்நிலையில் கொச்சியிலுள்ள பிரபல டாட்டூ கலைஞர் ஒருவர், தன் மீது பாலியல் சுரண்டலில் ஈடுபட்டதாகப் பிரபல மொடல் அழகியொருவர் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டு இருந்தார்.

இவ்விடயம் இணையத்தில் வைரலாகவே, குறித்த டாட்டூ கலைஞரால் பாதிக்கப்பட்ட மேலும் 3 இளம் பெண்கள், இது குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

இதையடுத்து கொச்சி பொலிஸார், டாட்டூ கலைஞர் மீது வழக்கு பதிவு செய்துள்ள நிலையில், அந்நபர் தலைமறைவாகி விட்டார் எனவும் அவரைப் பொலிஸார் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதுடெல்லி

ஏ.டி.எம்க்குள் இழுத்து சென்ற யூடியூப்

யூடியூபைப் பார்த்து ஏ.டி.எம்மில் கொள்ளையடிக்க மூவர் முயற்சி செய்த சம்பவம் புதுடெல்லியில் உள்ள தனியார் வங்கியொன்றில் இடம்பெற்றுள்ளது.

ஏ.டி.எம் க்குள் சம்பவதினத்தன்று நள்ளிரவில் புகுந்த மூவர் ஏ.டி.எம் இயந்திரத்தை பெயர்த்தெடுக்க முயன்றுள்ளனர். இதன்போது வங்கியின் தலைமையகத்தில் எச்சரிக்கை மணி ஒலிக்கவே, உடனடியாகச் செயற்பட்ட அதிகாரிகள் இது குறித்து பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து, பொலிஸார் குறித்த மூவரையும் கைது செய்துள்ளனர்.

இந்தியா வருகிறது உக்ரேன் பூனை

கேரளா

உக்ரேனில் போர் இடம்பெற்றுவரும் நிலையில், இந்தியாவைச் சேர்ந்த மாணவர்கள் பலர் விமானங்களின் மூலம் இந்திய அரசால் மீட்கப்பட்டு வருகின்றனர்.

கேரளாவைச் சேர்ந்த 21 வயதான ஆகில் ராதாகிருஷ்ணன் என்கிற மருத்துவம் பயிலும் மாணவர், தான் வளர்த்துவரும் 'அம்மிணி' என்ற பெண் பூனையை பிரிய முடியாமல் அதையும் தன்னுடன் இந்தியாவுக்கு கொண்டுவர அனுமதி வழங்குமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால், மீட்பு விமானங்களில் விலங்குகள் அனுமதிக்கப்பட மாட்டாது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும், "எனது உக்ரேன் நண்பர் ஒருவர், இப்பூனையை எனக்குப் பரிசளித்தார். இப் பூனையின் மீது அதிக பாசம் வைத்திருக்கிறேன்.

> **"எனது உக்ரேன் நண்பர் ஒருவர், இப்பூனையை எனக்குப் பரிசளித்தார். இப் பூனையின் மீது அதிக பாசம் வைத்திருக்கிறேன். அதனால் இப்பூனையை விட்டு என்னால் இந்தியா வருவதற்கு மறுத்துவிட்டார்**

அதனால் இப்பூனையை விட்டு என்னால் இந்தியா வரமுடியாது" என அவர் தெரிவித்துவிட்டார்.

அந்த மாணவர் மற்றும் பூனையின் நெருக்கத்தை கண்டு வியந்த அதிகாரிகள் அப் பூனையையும் விமானத்தில் கொண்டுவர அனுமதி அளித்தனர்.

மும்பை

சைக்கிளில் 100 வகையான தோசை

வைரலாகும் 'தோசை மேன்'

சைக்கிளில் 100 வகையான தோசைகளை விற்று வரும் 'தோசை மேன்' என்பவரின் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகின்றது. மும்பையைச் சேர்ந்த ஸ்ரீனிவாஸ் என்பவரே கடந்த 27 வருடங்களாக, சைக்கிளில் 100க்கும் மேற்பட்ட தோசைகளை தயாரித்து வீதி வீதியாகச் சென்று விற்பனை செய்து வருகிறார்.

இந்தியர்களுக்காக 100 பஸ்கள்

ரஷ்யா

உக்ரேன்- ரஷ்யா இடையிலான போர் 10ஆவது நாளாக நீடித்து வரும் நிலையில், போர் நடைபெறும் பகுதியில் இருந்து இந்தியர்களை மீட்கும் பணியில் இந்திய அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

அந்தவகையில் 'ஒப்ரேஷன் கங்கா' திட்டத்தின்கீழ் இதுவரை 63 விமானங்களில் சுமார் 13,300 இந்தியர்கள் மீட்கப்பட்டு, தாயகம் திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உக்ரேனின் பல்வேறு நகரங்களில் உள்ள இந்தியர்களை மீட்க 100 பஸ்களை ரஷ்யா வழங்கியுள்ளதாகவும், இந்தியர்கள் பாதுகாப்பாக வெளியேறுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் ரஷ்ய தூதரகம் தெரிவித்துள்ளது.

ரஷ்யா

விபரீத முடிவு எடுத்த 700 இந்திய மாணவர்கள்

அச்சத்தில் இந்திய அரசு

உக்ரேனின் சுமி நகரில் சிக்கித் தவிக்கும் இந்திய மாணவர்கள் எடுத்த விபரீத முடிவால் இந்திய அரசு அதிர்ச்சியடைந்துள்ளது.

உக்ரேன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளதால் அங்குள்ள இந்தியர்களை மீட்கும் நடவடிக்கையில் இந்திய அரசு ஈடுபட்டு வருகின்றது.

இந்நிலையில் உக்ரேனின் சுமி நகரில் சிக்கி தவிக்கும் இந்திய மாணவர்கள் தமது உயிரை காப்பாற்றுவதற்காக, சுமி நகரில் இருந்து தென்கிழக்கில் உள்ள மரியுபோல் நகருக்கு 600 கிலோ மீற்றர் தூரத்துக்கு நடந்து செல்லத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள வீடியோவில் "நாங்கள் அச்சம் அடைந்துள்ளோம். நீண்ட நாள்கள் இங்கு காத்திருந்தோம். இனியும் இங்கு இருக்க முடியாது. எங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இங்கு கடுமையான குளிர், உணவுப் பற்றாக்குறையால் துன்பப்பட்டு வருகின்றோம். கடந்த ஒரு வாரமாக மின்சாரம், இல்லாமல் தவித்து வருகிறோம். இதனால், சுமி நகரில் இருந்து தென்கிழக்கில் உள்ள மரியுபோல் நகருக்கு 600 கிலோ மீற்றர் தூரத்துக்கு நடந்து செல்ல திட்டமிட்டுள்ளோம். எல்லையில் உள்ள அதிகாரிகள் எங்களை மீட்டு அழைத்துச் செல்வார்கள் என்று நம்புகின்றோம்.

எங்களுக்கு ஏதாவது நேர்ந்தால் அதற்கு அரசும், இந்திய தூதரகமுமே பொறுப்பு" இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், மாணவர்களின் இவ் விபரீத முடிவால், மத்திய அரசு அதிர்ச்சி அடைந்துள்ளதோடு "அவசரப்பட்டு வெளியேற வேண்டாம்" என்று அவர்களை வலியுறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

பள்ளிவாசலில் குண்டு வெடிப்பு; 62 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானிலுள்ள பள்ளிவாசலொன்றில் நேற்று முன்தினம் (04) பயங்கரவாதிகள் நடத்திய குண்டுவெடிப்புத் தாக்குதலில் 62 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் பெஷாவர் நகரம் கோசா ரிஸல்டர் என்ற பகுதியில் உள்ள ஷியா பிரிவினருக்குச் சொந்தமான பள்ளிவாசலிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த பள்ளிவாசலுக்கு வந்த மர்ம நபர்கள் இருவர், பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த காவலர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு, தமது உடலில் கட்டியிருந்த வெடி குண்டை வெடிக்கச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் 62 பேர் உயிரிழந்துள்ள நிலையில் பலர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில், இத் தாக்குதலுக்கு ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இதனையடுத்து இப்பயங்கரவாதத் தாக்குதலுக்கு உலக நாடுகள் தமது கண்டனத்தை தெரிவித்து வருகின்றன.

ரஷ்யா

ரஷ்ய தொழிலதிபர்களின் சொத்துகள் பறிமுதல்

உக்ரேனுக்கு எதிரான போரில் ரஷ்யாவைப் பணிய வைப்பதற்காக, வெளிநாடுகளில் உள்ள ரஷ்ய தொழிலதிபர்களின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் ஒரு பகுதியாக, 143 மில்லியன் யூரோக்கள் மதிப்புள்ள சொகுசு படகை இத்தாலி கைப்பற்றி உள்ளது. மேலும், ரஷ்ய-உஸ்பெக் வணிக நடவடிக்கையில் உள்ள அலிஷர் உஸ்மானோவின் வில்லாவும் வடக்கு சர்டினியாவில் உள்ள டோனி எமரல்ட் கடற்கரைப்பகுதியும் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பேசிய இத்தாலிய வெளியுறவுத்துறை அமைச்சர், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினைப் பணிய வைக்க, இதுபோன்ற நடவடிக்கைகள் அவசியம் என்று தெரிவித்தார்.

மொஸ்கோ

ரஷ்யாவில் விசா, மாஸ்டர் கார்ட் சேவைகள் நிறுத்தம்

உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் தொடர் தாக்குதல் காரணமாக, நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இதனால், பல நிறுவனங்கள் ரஷ்யாவுக்கு அளித்து வந்த சேவைகளை நிறுத்தி வருகின்றன. இந்நிலையில் உக்ரேனைத் தாக்கும் ரஷ்யாவின் செயலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக, அந்நாட்டிற்கு தந்து வரும் தங்கள் சேவைகளை நிறுத்தி வைப்பதாகவும், ரஷ்யாவில் வழங்கப்பட்ட அட்டைகள் வெளிநாட்டில் செயற்படாது எனவும் சர்வதேச பணப்பரிவர்த்தனை நிறுவனங்களான விசா மற்றும் மாஸ்டர் கார்ட் ஆகியவை தெரிவித்துள்ளன.

இந்நிலையில் விசா மற்றும் மாஸ்டர் கார்ட்களின் அறிவிப்பால் தங்கள் நாடு அரசு வங்கியின் வாடிக்கையாளர் சேவைகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாது என ரஷ்யா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உக்ரேன்

மைக்ரோசொஃப்ட்

உக்ரேனுடன் கை கோர்த்து

உக்ரைன் மீது ரஷ்யா கடந்த 24ஆம் திகதியிலிருந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் உக்ரேனும் ரஷ்யா மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில் உலகப் புகழ்பெற்ற தொழில்நுட்ப நிறுவனமான மைக்ரோசொப்ட், ரஷ்யா மீதான தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில், புதிய அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதாவது ரஷ்யாவில் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தயாரிப்புகள், சேவைகள் என்பவை நிறுத்தி வைக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

அத்துடன் உக்ரேன் மீது, ரஷ்யா நடத்தும் இணைய தாக்குதலுக்கு எதிராக, தாங்கள் செயற்பட்டு வருவதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

அண்மையில், அப்பிள் நிறுவனமும் ரஷ்யாவில் தமது சேவையை நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

இரகசிய அறையில் 2 பெட்டி காதல் கடிதங்கள்

இரகசிய அறையொன்றில் இரண்டு பெட்டிகள் நிறைய காதல் கடிதங்கள் கண்டெடுக்கப்பட்ட விநோத சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் விர்ஜீனியா நகரில் அன்னா பிரில்லாமேன் என்ற பெண்ணொருவர் புதிதாக விலைக்கு வாங்கிய வீட்டிலிருந்தே இக் கடிதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டை சுத்தம் செய்யும் போதே, அவ்வீட்டில் ஓர் இரகசிய அறை இருப்பதை அவர் பார்த்ததாகவும், அங்கு இரண்டு பெட்டிகள் நிறையக் காதல் கடிதங்கள் இருந்ததைக் கண்டு, அவர் அதிர்ச்சியடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பெட்டி-ரூ என்ற பெண்ணுக்கு வேன்ஸ் என்ற நபர் இக்கடிதங்களை எழுதியுள்ளதாகவும் அவை 70 ஆண்டுகள் பழமையானவை எனவும், அக்கடிதத்தில் இலக்கண பூர்வமான வார்த்தைகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்ததாகவும் அவ்வீட்டின் உரிமையாளர் அன்னா பிரில்லாமேன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஆரம்பத்தில் இக் கடிதங்களை படிப்பது எனப்து, காதலர்களின் தனி சுதந்திரத்தில் தலையிடுவதாக இருக்கும் என்று தான் கருதியதாகவும், பின்னர் இக்கடிதங்களின் உரிமையாளர்களைக் கண்டுபிடிக்க விரும்பியதாகவும், இதனால் இது குறித்த தகவல்களை சமூக வலைதளங்களில் பகிர்ந்ததாகவும் இதன் மூலம் போலான்டில் உள்ள குறித்த காதல் ஜோடியின் பேரனைச் சந்தித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இச்சந்திப்பின் போது அக் காதல் ஜோடி 50 ஆண்டுகள் இணைந்து வாழ்ந்து, மரணித்துள்ளனர் என அவர்களது பேரன் கூறியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜெனிவா

உக்ரேன்- ரஷ்ய போரில் பொதுமக்கள் 352 பேர் உயிரிழப்பு

நேட்டோ அமைப்பில், உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அந்நாட்டின் மீது ரஷ்யா தொடர்ந்து 10 ஆவது நாளாகத் தாக்குதல் நடத்தி வருகிறது.

அதேபோல் உக்ரேனும் தம்மைத் தற்காத்துக் கொள்ள, ரஷ்ய படைகள் மீது பதில் தாக்குதல் நடத்திவருகின்றது. இம் மோதலில் இரு நாடுகளிலும் அதிக அளவில் உயிர் இழப்புகளும் பொருட்சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

அந்தவகையில், உக்ரேனில் ரஷ்யப் படையெடுப்பின் காரணமாக பொதுமக்கள் 352 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா சபை கவலை தெரிவித்துள்ளது

இது குறித்து ஐ.நா வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி, அன்று ரஷ்ய இராணுவம் உக்ரேன் மீது படையெடுத்தில் உக்ரைனில் 352 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 707 பேர் காயமடைந்துள்ளார்கள். இருப்பினும் உண்மையான எண்ணிக்கை, கணிசமான அளவு அதிகமாக இருக்கலாம். பெரும்பாலான பொதுமக்கள், கனரக பீரங்கிகள், ஏவுகணைகள், வாள்வழித் தாக்குதல் மூலம் கொல்லப்பட்டுள்ளார்கள்' என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

இனிங்ஸால் தோற்ற இலங்கை

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் இனிங்ஸால் இலங்கை தோற்றுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் மொஹாலியில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, தமது முதலாவது இனிங்ஸில் 8 விக்கெட்டுகளை இழந்து 574 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தமது ஆட்டத்தை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில், இரவீந்திர ஜடேஜா ஆட்டமிழக்காமல் 175, றிஷப் பண்ட் 96, இரவிச்சந்திரன் அஷ்வின் 61, ஹனும விஹாரி 58, விராட் கோலி 45, மாயங்க் அகர்வால் 33, அணித்தலைவர் றோஹித் ஷர்மா 29, ஷ்ரேயாஸ் ஐயர் 27, மொஹமட் ஷமி ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், சுரங்க லக்மால், லசித் எம்புல்தெனிய, விஷ்வ பெர்ணான்டோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், லஹிரு குமார மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, சகல விக்கெட்டுகளையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், பதும் நிஸங்க ஆட்டமிழக்காமல் 61, சரித் அஸலங்க 29, அணித்தலைவர் திமுத் கருணாரத்ன 28, அஞ்சலோ மத்தியூஸ் 22, லஹிரு திரிமான்ன 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், இரவீந்திர ஜடேஜா 5, இரவிச்சந்திரன் அஷ்வின், ஜஸ்பிரிட் பும்ரா ஆகியோர் தலா 2, மொஹமட் ஷமி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், பொலோ ஒன் முறையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, சகல விக்கெட்டுகளையும் இழந்து 178 ஓட்டங்களையே பெற்று இனிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், நிரோஷன் டிக்வெல்ல ஆட்டமிழக்காமல் 51, தனஞ்சய டி சில்வா 30, அஞ்சலோ மத்தியூஸ் 28, திமுத் கருணாரத்ன 27, சரித் அஸலங்க 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், இரவிச்சந்திரன் அஷ்வின், இரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா 4, மொஹமட் ஷமி 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக இரவீந்திர ஜடேஜா தெரிவானார்.

உக்ரேனுக்குள் ரஷ்யா ஊடுருவல்:

ஹாஸ் அணியால் வெளியேற்றப்பட்ட ரஷ்ய ஓட்டுநர்

உக்ரேனுக்குள் ரஷ்யா ஊடுருவியமை காரணமாக, ஃபோர்மியுலா வண் அணியான ஹாஸால் ரஷ்ய ஓட்டுநரான நிகிடா மஸெபின் வெளியேற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, தமது பிரதான அனுசரணையாளரான ரஷ்ய இரசாயன நிறுவனமான உரல்கலியின் ஒப்பந்தத்தையும் ஐக்கிய அமெரிக்க அணியான ஹாஸ் இரத்துச் செய்துள்ளது.

உரல்கலியானது மஸெப்பின்னினின் செல்வந்தத் தந்தையான டிமித்திரியாலேயே அவரது நிறுவனமான உரல்செம்மால் ஆளப்படுகிறது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் நெருங்கிய உதவியாளர் டிமித்ரி ஆவார்.

உக்ரேனிய ஆக்கிரமிப்பு தொடங்கிய பின்னர் டிமித்ரி, ஜனாதிபதி புட்டினைச் சந்தித்திருந்தார்.

ரஷ்ய குரான் பிறியை போர்மியுலா வண் இரத்துச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பியனான வடக்கு

அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் நடத்திய மாகாணங்ளுக்கு இடையிலான சுதந்திர கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் வடக்கு சம்பியனானது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற தெற்குடனான இறுதிப் போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் வென்றே தெற்கு சம்பியனானது.

இறுதிப் போட்டியில், ல் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொண்டு சம்பியனான வடக்குக்கு கிண்ணத்தை வழங்கி வைத்தார்.

பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

அவுஸ்திரேலியாவும் ஓட்டங்களைக் குவிப்பு

பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது டெஸ்டில் அவுஸ்திரேலியாவும் ஓட்டங்களைக் குவித்து வருகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், ராவல்பின்டியில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், தமது முதலாவது இனிங்ஸில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் 476 ஓட்டங்களைப் பெற்றபோது இனிங்ஸை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில், அஸார் அலி 185, இமாம்-உல்-ஹக் 157, அப்துல்லா ஷஃபிக் 44, அணித்தலைவர் பாபர் அஸாம் 36, மொஹமட் றிஸ்வான் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், அணித்தலைவர் பற் கமின்ஸ், நேதன் லையன், மர்னுஸ் லபுஷைன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் அவுஸ்திரேலியா, நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் 2 விக்கெடுகளை இழந்து 271 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது கனத்தில், மர்னுஸ் லபுஷைன் 69, ஸ்டீவ் ஸ்மித் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமலுள்ளனர்.

உலகக் கிண்ணம்:

பாகிஸ்தானை வீழ்த்திய இந்தியா

நியூசிலாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் பெண்களின் உலகக் கிண்ணத் தொடரில், மௌன்ட் மகட்டரேயில் நேற்று நடைபெற்ற பாகிஸ்தானுடனான போட்டியில் இந்தியா வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, ஆரம்பத்தில் ஷெஃபாலி வர்மாவை இழந்தபோதும், ஸ்மிருதி மந்தனாவின் 52 (75), தீப்தி ஷர்மாவின் 40 (57) ஓட்டங்கள் மூலம் இனிங்ஸை நகர்த்தியது. பின்னர் 18 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை பறிகொடுத்தபோதும், பூஜா வஸ்ராகரின் 67 (59), ஸ்னே ராணாவின் ஆட்டமிழக்காத 53 (48) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 245 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், 43 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 137 ஓட்டங்களையே பெற்று 107 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், ராஜேஸ்வரி கைகவாட் 4, ஜுலான் கோஸ்வாமி, ஸ்னே ராணா ஆகியோர் தலா 2, மேக்னா சிங்க், தீப்தி ஷர்மா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகியாக பூஜா வஸ்ராகர் தெரிவானார்.

முருகவேல் சண்முகன்
shanmugan10@gmail.com

கிங் வோர்னி

சடந்த இரண்டு நாள்களாக எங்கு திரும்பினாலும் ஷேன் வோர்ன் குறித்த பேச்சாகவே, அதுவும் 90கள், 2000ங்களின் ஆரம்பத்தைச் சேர்ந்த கிரிக்கெட் இரசிகர்களின் பேச்சாக இருக்கின்றது.

ஆக, யார் இந்த வோர்ன்? ஏன் அவர் இவ்வாறு கொண்டாடப்படுகின்றார் என்ற '2கே' கிட்ஸ்களின் கேள்விகளில் நியாயமில்லாமலில்லை. ஏனெனில், இன்றைய கால கட்டங்களில் விராட் கோலி, மகேந்திர சிங் டோணி உள்ளிட்டோர் நட்சத்திரங்களாகவே காட்சியளிக்கின்றனர்.

பொப் நட்சத்திரங்கள் கோலோச்சிய கால கட்டத்தில், அவர்களுக்கு ஈடுணையான நட்சத்திரமாகவே வோர்ன் காணப்பட்டிருந்தார். வோர்னின் தனிப்பட்ட வாழ்க்கையானது சிக்கலானதாகவே காணப்பட்டிருந்ததுடன், ஊக்கமருந்துச் சர்ச்சை, ஆட்டநிர்ணயக்காரர்களுக்கு தகவல் வழங்கியமை என சிக்கலானதாகவே காணப்பட்டபோதும் 'கிங்' வோர்னியாகவே அவர் திகழ்ந்திருந்தார்.

ஆடுகளத்தில் சாதித்தவை தவிர, களத்துக்கு வெளியேயான அவரது நடவடிக்கைகள் காரணமாகவே, கிங்காக வோர்ன் திகழ்ந்திருந்தார். அதுவும் எமது நாட்டைப் பொறுத்த வரையில், 2000 இன் ஆரம்பங்களிலிருந்து எமது இரசிகர்களுக்கு நெருக்கமானவராகவே களத்துக்கும் களத்துக்கும் வெளியேயும் வோர்ன் பேசப்பட்டிருந்தார்.

டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றுவது யார் என்ற போட்டியில் முத்தையா முரளிதரனோடு வோர்ன் போட்டிபோட்டிருந்த நிலையில் களத்துக்குள் அறியப்பட்டிருந்ததோடு, 2004ஆம் ஆண்டு சுனாமியைத் தொடர்ந்து முரளிதரனின் அழைப்பையடுத்து இலங்கைக்கு விஜயம் செய்திருந்த வோர்ன், சிறுவர்களுக்கான தனது அறக்கட்டளை மூலம் உதவிகளை வழங்கியிருந்தார்.

இது தவிர, களத்தில் அதிரடியாகச் செயற்படுபவராக இல்லாமல், மது அருந்தும், சிகரெட் புகைக்கும், பீஸாக்களைச் சாப்பிடுபவர் போலவே வோர்ன் காணப்பட்டிருந்த நிலையில், அக்காலகட்டத்தில் அவுஸ்திரேலியாவின் சிறுவர்களும் அவரைப் பிரதிபலிக்கவே விரும்பியிருந்தனர்.

மூக்கில் கிரீம், நிறப்பூச்சு பூசப்பட்ட அரித்து வெட்டப்பட்ட தலைமுடி, தோடு என கவர்ச்சியாக காணப்பட்டிருந்த வோர்னை சிறுவர்கள் விரும்பியிருந்ததோடு, சிறுவர், பெரியோர் எனப் பாகுபாடு காட்டாமல் எவருக்கும் அவரவர் கோரும் இடங்களில் கையொப்பமிடுவதுடன் சாதாரணமானவர்களுக்கு நெருக்கமாகப் பழகுவதும் வோர்னைப் பலருக்கும் பிடித்துப் போக காரணமாயிற்று.

இவ்வாறான புகழை, பிற்காலங்களில் அடைந்திருந்தாலும் வோர்னின் ஆரம்பம் சொல்லிக் கொள்ளும்படியாக அமையவில்லை. 1990ஆம் ஆண்டு ஒழுக்கக் காரணங்களால் அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட்டிலுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அகடமியிலிருந்து வோர்ன் விடுவிக்கப்பட்டிருந்தார்.

பின்னர், 1992ஆம் ஆண்டு ஜனவரி மாதம், தனது 23ஆவது வயதில் இந்தியாவுக்கெதிரான நான்காவது டெஸ்டில் அறிமுகத்தை வோர்ன் மேற்கொண்டிருந்த நிலையில், அது ஞாபகப்படுத்தக்கூடிய வகையில் அமைந்திருக்கவில்லை. இந்தியாவின் ஒற்றை இனிங்ஸில் 150 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தார்.

பிற்பட்ட காலங்களில் 708 விக்கெட்டுகளை டெஸ்ட் போட்டிகளில் வோர்ன் கைப்பற்றியபோதும், எப்போதும் இந்தியா மீது வோர்னால் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. ஏனைய அனைத்து அணிகளுக்கெதிராகவும் 30க்கும் கீழான சராசரியை வோர்ன் பெற்றிருந்தபோதும், இந்தியாவுக்கெதிரான 47.18 என்ற சராசரியைக் கொண்டிருந்தார்.

கொழும்பில் 1992ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டே பிற்காலங்களில் வோர்ன் எவ்வாறு ஆகப் போகின்றார் என்பதைக் கோடிட்டுக் காட்டியிருந்தது.

பின்னர், 1993ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், ஆஷஸ் டெஸ்டொன்றின் தனது முதலாவது பந்தில், நூற்றாண்டின் சிறந்த பந்து என அடையாளப்படுத்தப்படும் பந்தை வோர்ன் வீசியிருந்தார். சிறந்ததொரு லெக்பிரேக்கான அப்பந்தானது, லெக் ஸ்டம்புக்கு வெளியே வீழ்ந்து, மைக் கேட்டிங்கைத் தாண்டிச் சென்று ஒஃப் ஸ்டம்ப்பின் மூலையைப் பதம் பார்த்திருந்தது. இத்தொடரே வோர்னை நாயகனொருவராக மாற்றியிருந்தது.

அக்காலகட்டத்தில் அழிவடைந்து போய்க்கொண்டிருந்த லெக் ஸ்பின்னை மீண்டும் ஆயுதமாக்கிக் கொண்டு வந்த பெருமை வோர்னையே சாரும். அதன்பின்னர், ஒவ்வோர் அணியிலும் ஒவ்வொரு லெக்ஸ்பின்னர்கள் இடம்பெற்றதுடன், சிறுவர்கள் ஒவ்வொருவரும் வோர்னைப் போல பந்துவீச முயன்று கொண்டிருந்தனர்.

பின்னர், 1995ஆம் ஆண்டு சிக்கலில் வோர்ன் சிக்கியிருந்தார். ஆடுகள, வானிலைத் தகவலை இந்திய ஆட்டநிர்ணயக்காரரொருவருக்கு வழங்கியதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையால் வோர்னுக்கும் மார்க் வோக்குக்கும் தண்டம் அறவிடப்பட்டிருந்தது. இதை கிரிக்கெட் சபை மறைத்திருந்ததோடு, மூன்றாண்டுகளுக்குப் பின்னர் ஊடகங்கள் வாயிலாக வெளிவந்திருந்தது.

வோர்னின் காலத்தில், கிளென் மக்ராத், பிரட் லீ, மைக்கல் கஸ்ப்ரோவிச், ஜேஸன் கிலெஸ்பி, அன்டி பிச்செல் என தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள் இருந்து, அவர்கள் உருவாக்கிய அழுத்தத்தில் இலகுவாக வோர்ன் விக்கெட்டுகளைக் கைப்பற்றுகின்றார் என்ற ஒரு வாதம் இருக்கின்ற நிலையில், மறுபக்கமாக அவர்கள் கைப்பற்றியதை விடுத்து, அவர்களின் காலத்தில் இவ்வளவு விக்கெட்டுகளை வோர்ன் கைப்பற்றினார் என்ற கருத்தும் நிலவுகின்றது. அதுவும் வழமையாக தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த சுழற்பந்துவீச்சாளர்களே சாதித்த நிலையில், அவுஸ்திரேலியாவின் சுழற்பந்துவீச்சாளரொருவர் இவ்வளவு விக்கெட்டுகளைக் கைப்பற்றியது அச்சரியமாக நோக்கப்படுகிறது.

இந்நிலையில், வோர்னின் சமகாலத்து போட்டியாளராான முரளிதரனின் காலத்தில், இவ்வாறான பலம் வாய்ந்த வேகப்பந்துவீச்சாளர்கள் சமிந்த

2004ஆம் ஆண்டு சுனாமியைத் தொடர்ந்து முரளிதரனின் அழைப்பையடுத்து இலங்கைக்கு விஜயம் செய்த வோர்ன், சிறுவர்களுக்கான தனது அறக்கட்டளை மூலம் உதவிகளை வழங்கியிருந்தார்

சிறுவர், பெரியோர் எனப் பாகுபாடு காட்டாமல் எவருக்கும் அவரவர் கோரும் இடங்களில் கையொப்பமிடுவதுடன் சாதாரணமானவர்களுக்கு நெருக்கமாகப் பழகுவதும் வோர்னின் பண்பாகும்

அக்காலகட்டத்தில் அழிவடைந்து போய்க்கொண்டிருந்த லெக் ஸ்பின்னை மீண்டும் ஆயுதமாக்கிக் கொண்டு வந்த பெருமை வோர்னையே சாரும்

'விஸ்டன்' சஞ்சிகையால் நூற்றாண்டின் சிறந்த ஐந்து வீரர்களில் ஒருவராகப் பெயரிடப்பட்டிருந்தார். பெயரிடப்பட்ட ஒரே பந்துவீச்சாளர் வோர்ன் ஆவார்

வாஸைத் தவிர வேறெவரும் குறிப்பிடத்தக்கதாக இல்லாத நிலையில், அவரே அழுத்தத்தையும் வழங்கி, அவரே விக்கெட்டுகளையும் கைப்பற்ற வேண்டி இருந்தது. இதிலும், வேறு சொல்லிக் கொள்ளும்படியான பந்துவீச்சாளர்கள் வாஸைத் தவிர வேறு எவரும் இல்லாத நிலையில், முரளிதரனுக்கு கைப்பற்றுவதற்கு அதிக விக்கெட்டுகள் இருந்தன என்ற வாதமும் காணப்படுகின்றது.

இது தவிர, முரளிதரனுக்கு சிறு வயதிலேயே ஏற்பட்ட விபத்து காரணமாக, அவரது கை மடிப்பானது ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டதை விட அதிகபட்சமாக இருந்தது என்ற முக்கியமான வாதமும் உண்டு. இதனுடன் ஒப்பிடுகையில் இலகுவான பந்துவீச்சுப்பாணியை வோர்ன் கொண்டிருந்தார். இவ்வாறாக வாதங்கள், இருக்கையில் கட்டுரையாளரைப் பொறுத்த வரையில், இருவருமே கொண்டாடப்பட வேண்டியவர்கள் ஆவர்.

1998ஆம் ஆண்டிலிருந்து 2001ஆம் ஆண்டு வரையில் தோட்பட்டை சத்திரசிகிச்சை, இந்தியாவுடனான போட்டிகள் காரணமாக வோர்னின் பெறுபேறுகள் வீழ்ச்சியடைந்திருந்தபோதும், 1999ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டியிலும், இறுதிப் போட்டியிலும் மிகமுக்கியமானவராக வோர்ன் பரிணமித்திருந்தார்.

தொடர்ந்து, 2000ஆம் ஆண்டு விளையாடிக் கொண்டிருக்கையிலேயே 'விஸ்டன்' சஞ்சிகையால் நூற்றாண்டின் சிறந்த ஐந்து வீரர்களில் ஒருவராகப் பெயரிடப்பட்டிருந்தார். பெயரிடப்பட்ட ஒரே பந்துவீச்சாளர் வோர்ன் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், 2003ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடருக்கு முன்பதாக தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தைப் பயன்படுத்தியமைக்காக வோர்னுக்கு அனைத்து வகையான போட்டிகளிலும் விளையாடுவதற்கு ஓராண்டு தடை விதிக்கப்பட்டது. எடை குறைப்புக்காக தாயாரே குறித்த ஊக்கமருந்தை வழங்கியதாக வோர்ன் தெரிவித்திருந்தார். இத்துடன் வோர்னின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடும் காலம் முடிவுக்கு வந்திருந்தது. மொத்தமாக, 194 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடிய வோர்ன் 293 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்.

ஏனையோர் போலல்லாது, அதிரடியான மீள்வருகையைப் புரிந்த வோர்ன், டெஸ்ட் போட்டிகளில் 500 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய முதலாவது சுழற்பந்துவீச்சாளராக மாறியதுடன், 533ஆவது விக்கெட்டைக் கைப்பற்றுகையில் முரளிதரனைத் தாண்டி. டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றியவராக மாறியிருந்தார்.

இதேவேளை, 2005ஆம் ஆண்டு 96 விக்கெட்டுகளை வோர்ன் கைப்பற்றிய நிலையில், ஆண்டொன்றில் பந்துவீச்சாளரொருவர் கைப்பற்றிய அதிக டெஸ்ட் விக்கெட்டுகள் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதியாக, 2007ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 145 டெஸ்ட் போட்டிகளில் 708 விக்கெட்டுகளைக் கைப்பற்றியபடி வோர்ன் தனது 37ஆவது வயதில் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார். அக்காலகட்டத்தில், டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றியவராக வோர்னே காணப்பட்டிருந்தார்.

இதேவேளை, வோர்ன் 145 டெஸ்ட் போட்டிகளில் 3,154 ஓட்டங்களையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதிலும், முக்கியமான கட்டங்களிலேயே வோர்னின் துடுப்பாட்டப் பங்களிப்புகள் கிடைக்கப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இச்சந்தர்ப்பத்தில், வோர்ன் போன்றதொரு ஜாம்பவானின் காலகட்டத்தில் இருந்தமை காரணமாக வேறெந்த அணியிலும் தனித்த சுழற்பந்துவீச்சாளராக இடம்பெறக்கூடிய லெக்ஸ்பின்னர் ஸ்டுவர்ட் மக்கில்லுக்கு போதிய வாய்ப்புகள் கிடைக்கப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், அவுஸ்திரேலியாவுக்கு 11 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கு வோர்ன் தலைமை தாங்கியிருந்தபோதும், அவுஸ்திரேலியாவின் டெஸ்ட் அணி கொண்டிருக்காத சிறந்ததோர் அணித்தலைவராக வோர்ன் நோக்கப்படுகின்றார். ஏனெனில், போட்டியின் தன்மையை ஊகித்தறிந்து, சரியான கணிப்புகளை மேற்கொண்டதில் வோர்ன் தேர்ச்சி பெற்றவராகக் காணப்பட்டிருந்தார்.

சர்வதேசப் போட்டிகளில் ஓய்வுக்குப் பின்னர், வர்ணனையாளராக இது வெளிப்பட்டிருந்தது. தவிர, இந்தியன் பிறீமியர் லீக்கின் ஆரம்ப பருவகாலத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்குத் தலைமை தாங்கியிருந்த வோர்ன், அவ்வணிக்கு முதற்பருவகாலத்திலேயே சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொடுத்திருந்தார். இதில், றோயல்ஸில் இரவீந்திர ஜடேஜாவை அடையாளங்கண்டு, அவரை இனங்காட்டியவர் வோர்ன் என்றால் மிகையாகாது.

அந்தவகையில், இவ்வாறான உயரங்களை எட்டிய வோர்ன் தாய்லாந்தின் கொஹ் சமுயில் சுற்றுலாவ சென்றிருந்தபோது, கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்திருந்தார். அவருக்குரிய மரணத்துக்கான காரணமாக மாரடைப்பு சந்தேகிக்கப்படுகின்றது. இறக்கும்போது அவருக்கு வயது 52 ஆகும்.

இறுதியாகக் கூட டெஸ்ட் போட்டிகளில் தான் அணிந்திருந்த தொப்பியை ஏலத்துக்கு விட்டு, அதில் வந்த தொகையை அவுஸ்திரேலிய காட்டுத்தீயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியிருந்தார்.

இதேவேளை, கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், சீட்டாட்டமான போக்கரில் தொழில்முறை ரீதியிலாக வோர்ன் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், அவுஸ்திரேலியாவின் மெல்பேணில் உள்ள தெற்குப் புற அரங்கமானது தற்போது வோர்னின் பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் திங்கட்கிழமை, 07 மார்ச் 2022, இல. 08, லாஜியிட்டி கருக்க வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.